கைக்கடிகாரம், அழகுசாதன, அன்பளிப்பு, எவர்சில்வர், விளையாட்டுப் பொருள்களுக்கு நாடுங்கள்! ராஜு ஸ்ரோர்ஸ் 67, 69, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.

மக்கள்! ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 23 வியாழக்கிழமை (06 – 04 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 130

நெல்லுடைக்கும் மா அரைக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள் மற்றும் பொலித்தீன், கேக், குளிர்பான தயாரிப்புக்களுக்கு ராஜு ஸ்ரோர்ஸ் 67, 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# ஓய்வை பயன்படுத்தி படைகளுக்கு பயிற்சி; எவ்வேளையும் செயற்பட உஷார் நிலையில்!

## அனுருத்த ரத்வத்த பேட்டி

கொழும்பு, ஏப்ரல். 6

இப்போதுள்ள ஓய்வைப் பயன்படுத்தி இராணுவத்தினருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாகவும் —

அதனால் எந்த வேளையிலும் செயற்படக்கூடிய உஷார் நிலையில் அவர்கள் கிழக்கில் தயாராக இருப்பதாகவும்—

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்த இந்தியாவிலிருந்து வெளிவரும் "புரண்ட் லைன்" சஞ்சிகைக்கு கடந்த வாரம் வழங்கிய பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

இராணுவத்தின் மன உறுதி மிகவும் உயர்ந்த நிலையில் உள்ளதாகவும் —

பூநகரி இராணுவ முகாமை அகற்றுவதில்லை என்பதில் அரசு உறுதியாக உள்ளதாகவும் – பிரதி அமைச்சர் அனுருத்த கூறியுள்ளார்.

''புரண்ட்லைன்'' சஞ்சிகையின் கொழும்புச் செய்தியாளர் வி. ஜயந்துக்கு அளித்த பேட்டியில் அவர் சமாதானத்தினைக்காணமுடியும் என்றும் நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார்.

பாதுகாப்பு பிரதி அமைச்சரின் பேட்டியில் முக்கிய பகுதி வருமாறு;—

கேள்வி: சமாதானப் பேச்சுச் சம்பந்தமான இப்போதைய நிலையை எவ்வாறு மதிப்பிடுகிறீர்கள்?

பதில்: சமாதான முயற்சி வெற்றி அளிக்கும் என்பதில் நான் மிகவும் நம்பிக்கையாக உள்ளேன். சில பிரச்சினைகள் இருப்பினும் அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளையும் பொறுத்த மட்டில் நிலைப்பாடு மிகத் தெளிவாகவே உள்ளது.

நீண்ட காலத்தின் பின்னர் யாழ்ப்பாணத்து மக்கள் சமாதானத்துக்கான தமது விருப்பத்தைத் தெரிவித்துள்ளனர். வடக்கு – தெற்கு மக்களிடையேயான கருத்துப்பரிமாறல்கள் தொடங்கியுள்ளன. இருதரப்பாரும் அங்கும் இங்கும் போய்வரத் தொடங்கி உள்ளனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தளம் பகுதியில் நள்ளிரவு குண்டு வெடிப்பு!

கொழும்பு, ஏப். 6

புத்தளம் நான்காம் வட்டாரம் பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் கடந்த சனியன்று நள்ளிரவு பெரும் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம் பெற்றது. அதனால் அப்பகுதிகளில் பெரும் பதற்றம் நிலவியது.

போல்ஸ் வீதியில் உள்ள வீடு ஒன்றிலேயே குண்டு வெடித்தது. அதனால் வீட்டு கதவுகள், ஜன்னல்கள் நொருங்கின.

வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தவர்கள் குண்டு வெடிப்பின் அதிர்வினால் தூக்கி வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் எவரும் காயமடையவில்லை.

குண்டு வெடிப்பினால் வீட்டின் அருகே நின்றிருந்த மரங்கள் கருகிப்போயின.

வீட்டுக் கூரையில் தீ பற்றிய போதும் அயலவர் உதவியுடன் பின்னர் அது அணைக்கப்பட்டது.

தபால் ஊழியர் ஒருவரது வீட்டிலேயே இக் குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக புத்தளம் பொலீஸார் புலன் விசாரணை மேற்கொண்டுள்ளனர். [ஐ]

## புலிகளின் பதிலை எதிர்பார்க்கிறோம்

### அமைச்சர் கதிர்காமர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 6

நான்காம் கட்டப் பேச்சுக்களை நடத்துவது தொடர்பாக மூன்று திகதிகளை விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு அறிவித்துள்ளோம். அதற்கான பதிலை அவர்களிடமிருந்து எதிர்பார்த்துள்ளோம்.

வெளி விவகார அமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமர் அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் நடந்த செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கு இறுதியாக அனுப்பிய கடிதத்துக்கு இதுவரை அவர்களிடமிருந்து பதில் எதுவும் கிடைக்கவில்லை.

இம்மாதம் 8 ஆம். அல்லது 9 ஆம் 10 ஆம் திகதிகளில் பேச்சுவார்த்தையை நடத்த முடியும் என அரசு அறிவித்துள்ளது என்றும் அமைச்சர் கதிர்காமர் தெரிவித்தார்.

மற்றொரு கேள்விக்கு பதி

( 6ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படை சிப்பாய் தற்கொலை

கொழும்பு, ஏப். 6

அக்குறணையில் ஸ்ரீலங்கா கடற்படையைச் சேர்ந்த சிப்பாய்ஒருவர் தற்கொலை செய்துள்ளார். அவரது தற்கொலைக்கான காரணம் தெரியவரவில்லை.

அவர் ஆறு வருட காலம் ஸ்ரீலங்கா கடற்படையில் கடமையாற்றியுள்ளார். [ஐ-7]

## தினேஷ் குணவர்த்தனவை கொலை செய்ய சதியாம்!

### பாதுகாப்பு வழங்கக் கோரிக்கை

கொழும்பு, ஏப். 6

தினேஷ் குணவர்த்தனவுக்கு உரிய பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் ஐக்கிய முன்னணி அரசிடம் கேட்டுள்ளது.

தினேஷ் குணவர்த்தனவைக் கொலை செய்ய விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளனர் எனத் தேசிய புலனாய்வுப் பிரிவுக்கும், பாதுகாப்பு அமைச்சுக்கும் தகவல் கிடைத்துள்ள போதும் அவருக்கு பாதுகாப்பு வழங்க அரசு உரிய நடவடிக்கை எடுக்காதது கவலை அளிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளவத்தைப் பகுதியில் ஹோட்டல் ஒன்றில் பொலிஸார் கைது செய்ய முயன்ற

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தற்கொலைப் படையினர் கொழும்பு வந்துள்ளனராம்

### பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தற்கொலைப் படைப் பிரிவினர் கொழும்பு நகருக்குள் ஊடுருவி இருப்பதாகக் கிடைத்த புலனாய்வுத் தகவல்களை அடுத்துநகரில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பு நகரில் வாகனங்களை சோதனையிடும் நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப் பட்டுள்ளன.

நகரில் உள்ள வீடுகள், ஹோட்டல்கள், விடுதிகள் மீது திடீர் சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-7]

## அலரி மாளிகைக்குள் நுழைந்தவர்

## சித்த சுவாதீனமற்ற பறங்கி இனத்தவராம்

கொழும்பு, ஏப் 6

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் வாசஸ்தலமான அலரி மாளிகைக்குள் அத்துமீறிப் பிரவேசித்து உள்ளே தங்கியிருந்த சமயம் கைது செய்யப்பட்ட நபர் ஒரு பறங்கியர் எனத் தெரிவிக்கப்படுகிறது,

அந்த நபர் சித்த சுவாதீனமற்ற நிலையில் இருப்பதாக கொழும்பு ஆஸ்பத்திரி உள நோய் நிபுணர்கள் இரகசியப் பொலீஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

அலரி மாளிகையின் பின்புற நுழைவாசல் ஊடாகவே அந்த நபர் உள்ளே நுழைந்தார் என்றும் —

இச் சம்பவம் குறித்து தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## அலரி மாளிகைச் சம்பவம்:

## பொலீஸ் அதிகாரிக்கு திடீர் இடமாற்றம்

கொழும்பு, ஏப்ரல் 6

அலரி மாளிகையின் நிர்வாகப்பிரிவில் பணியாற்றிய உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் ஜனாப்சம்சுடீன் அங்கிருந்து பொலீஸ் தலைமையகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியின் வாசஸ் தலமான அலரிமாளிகைக்குள் இளைஞர் ஒருவர் அத்துமீறிப் பிரவேசித்த சம்பவத்தை அடுத்தே இவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அலரி மாளிகையின் பாதுகாப்பு பிரிவுகளில் உடனடியாக மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதாக செய்திகள் தெரிவித்துள்ளன. (ஐ-6)

## ஹில்லறி கிளின்டனின் விஜயத்துக்கு எதிர்ப்பு!

### கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஏப். 6

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் முன்பாக புத்தளம் மாவட்டம் இரணவில பகுதியைச் சேர்ந்த மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அமெரிக்காவின் முதல் பெண்மணி ஹில்லறி கிளின்டனின் விஜயத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தே அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இரணவில பகுதியில் அமெரிக்காவின் ''வொய்ஸ் ஒவ் அமெரிக்கா'' வானொலி நிலையம் நிர்மாணிக்கப்படுவதை நீண்ட காலமாக எதிர்த்து வரும் அப்பகுதி மக்கள் அந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். அமெரிக்காவுக்கு எதிரான கோஷங்களை அவர்கள் எழுப்பினர்.

'கிளின்டனைத் துரத்துக', 'அமெரிக்க வானொலி நிலையத்தைத் தகர்க்குக' என்ற சுலோக அட்டைகளை அவர்கள் வைத்திருந்தனர்.

'மூன்றாவது உலக நண்பர்கள்' என்ற அமைப்பு இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. [ஐ-6–7]

## ஆயுதக் கொள்வனவு ரகசியத்தை வெளியிட வேண்டாம் என "பாக்ஸ்"

### நுகேகொடவிலிருந்து லண்டனுக்கு அனுப்பப்பட்டதாம்

கடந்த அரசின் காலத்தில் மேற் கொள்ளப் பட்டதாகக் கூறப்படும் ஆயுதக் கொள்வனவு தொடர்பான கேள்விப் பத்திரத்தை ஏற்றுக்கொண்ட இங்கிலாந்தைச் சேர்ந்த நிறுவனமொன்றின் இலங்கைப் பிரதிநிதிமீது இரகசியப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள இரகசியப் பொலீஸ்குழுஒன்று இங்கிலாந்து சென்றுள்ளது.

அக்குழு அந்நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரிகளிடமிருந்து ஒப்புதல் வாக்கு மூலங்களைப் பெற்றுள்ளதுடன் முக்கியமான ஆவணங்களையும் கைப்பற்றியுள்ளது என பொலீஸ் திணைக்களத்தைச் சேர்ந்த மூத்த அதிகாரி ஒருவர் கூறியதாக 'லங்காதீப' பத்திரிகை தெரிவிக்கிறது.

இரகசியப் பொலீஸ் குழு இங்கிலாந்து சென்றதையடுத்து நுகேகொடவிலிருந்து ''பாக்ஸ்'' செய்தியொன்று இங்கிலாந்திலுள்ள ஆயுதநிறுவனத்திற்கு அனுப்பப் பட்டுள்ளதாம்.

அச்செய்தியில் ஆயுதக் கொள்வனவு தொடர்பான தகவல்கள் எதையும் வெளியிட வேண்டாமெனக் கோரப்பட்டுள்ளதாம்.

இந்த ''பாக்ஸ்'' செய்தி ஆயுதவியாபாரத்தில் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படுபவராலேயே அனுப்பப்பட்டிருக்கலாம் என பொலிசார் நம்புவதாக ''லங்காதீப'' தெரிவித்துள்ளது.

இந்த ஆயுதக் கொள்வனவு தொடர்பாக முன்னை நாள் இராணுவத் தளபதிகளின் வாக்கு மூலங்கள் மிக விரைவில் பெறப்படவுள்ளதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரீ.வி. சுமணசேகரா தெரிவித்துள்ளார். (இ-10)

## தமிழக ஆளுநருக்கு எதிராக ஜெயலலிதா வழக்குத் தாக்கல்

தம்மீதான ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்ய டாக்டர் சுப்பிரமணிய சுவாமிக்கு தமிழக ஆளுநர் சென்னா ரெட்டி அனுமதி அளித்தமையை எதிர்த்து முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா சென்னை உயர் நீதிமன்றத்தில் நேற்று வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

தம்மீது வழக்குத் தொடர அனுமதித்த ஆளுநரின் செயல் உள் நோக்கம் கொண்டது என்றும் —

தமக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை எனவும் —

தமிழகஆளுநராக சென்னா ரெட்டி பொறுப் பேற்றது முதல் அவர் தமக்கும், தமது அரசுக்கும் எதிராகவே செயற்பட்டு வருகிறார் என்றும் செல்வி ஜெயலலிதா தமது மனுவில் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கு அநேகமாக இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என அகில இந்திய வானொலி தெரிவித்தது. [ஐ-7]

## விமான நிலையத்தில்

## பத்மா மகாராஜாவின் பொதியால் பரபரப்பு!

கொழும்பு, ஏப். 6

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் மேலதிக செயலாளர் பத்மா மகாராஜாவின் பொதி ஒன்றை விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் தடுத்து வைத்த சம்பவம் சந்திரிகாவின் இந்திய விஜயத்தின் போது இடம்பெற்றது.

சம்பவம் பற்றிச் கூறப்படுவதாவது:–

சம்பவதினமும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா வழமை போல் விமான நிலையத்துக்கு சிறிது தாமதித்தே வந்தார்.

அவர் வந்த மோட்டார் பவனியிலேயே அவரது மேலதிக செயலாளர் பத்மா மகாராஜாவும் வந்தார்.

இவர்களது பொதிகள் விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகளின் அனுமதியைப் பெறுவதற்காக ஏற்கெனவே

( 6ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்ப ''ஜெ'' – ரெட்டி [illegible] மோதல் குடுமி [illegible] பாருங்கோ......!

## தென்பகுதி எம்.பிக்கள் கிளாலியூடாக பயணம் செய்தால் பூநகரிப்பாதை விவகாரத்துக்கு தீர்வு!

### யாழ். வந்த பிரதி மேற்றிராணியார் நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 6

தென்னிலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களும், அரசியல் தலைவர்களும் கிளாலியூடாகப் பயணம் செய்ய வேண்டும். அப்போது தான் வடபகுதி வாழ் தமிழ் மக்கள் போக்குவரத்தில் எதிர் நோக்கும் கஷ்டங்களை [illegible] ரீதியாக உணரமுடியும்.

கிளாலிப் போக்குவரத்துக் கஷ்டங்களை உணர்ந்த பின்னர்' போக்குவரத்துப் பாதையைத் திறக்குமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

அதன் மூலம் போக்குவரத்துப் பாதைப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வுகாணமுடியும்.

இவ்வாறு ஆலோசனை தெரிவித்தார் கொழும்பு பிரதி மேற்றிராணியார் அதி. வண. மல்கம் ரஞ்சித்.

யாழ்ப்பாணத்து நிலைமைகளை நேரில் பார்ப்பதற்காக அவர் கிளாலி ஊடாக நேற்று இங்கு வந்து சேர்ந்தார்.

அவருடன் வண. பிதாக்கள் மேர்வின், அலெக்சான்டர், பிரஸ்டின் டி. சில்வா ஆகியோரும் கூட வந்துள்ளனர்.

பிரதி மேற்றிராணியார் மல்கம் ரஞ்சித் உதயனுக்கு மேலும் தெரிவித்ததாவது:–

டாம். மக்களின் கஷ்டங்களை நேரில் அறிவதற்காக கஷ்டமான கிளாலிப் பாதையூடாக வந்துள்ளேன். நல்ல போக்குவரத்துப் பாதையின்றி மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களை நானும் நேரடியாக அனுபவிக்க முடிந்தது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வில்லூன்றி தேவஸ்தானம்
# விசேட உற்சவம்
**06 - 04 - 1995**
வியாழக்கிழமை
## மண்கும்பான்
## வீரகத்தி பிள்ளையார்

மகோற்சவ தினத்தை ஒட்டி ஒருநாள் திருவிழாவும் அன்னதானமும் இன்று வியாழக்கிழமை (06 - 4 - 95) நடைபெறும்.

காலை 9.30 — ஸ்நபனாபிஷேகமும் விசேட பூசையும்
மு. பகல் 11.00 — வசந்த மண்டப பூசை சுவாமி உள்வீதி உலா
நண்பகல் 12.00 மணி மகேஸ்வரபூசை (அன்னதானம்)

மண்கும்பான் கிராம முன்னேற்ற சங்கம்

(36070)

உ
கணபதி துணை
யாழ்ப்பாணம் நல்லூர்
ஸ்ரீசந்திரசேகரப்பிள்ளையார் தேவஸ்தானம்
## வருடாந்த மஹோற்சவம்

1995ஆம் ஆண்டு சித்திரை மாதம் 6ஆம் திகதி இன்று வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் உற்சவம் நடைபெறும்.

14 — 04 — 1995 வெள்ளிக்கிழமை புதுவருட தினத்தன்று காலை 8மணிக்குஇரதோற்சவம்.

06 — 04 — 1995 வியாழக்கிழமை முதல் 16—04—1995 ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் இரவு 8-00 மணி தொடக்கம் 9-00 மணிவரை

"மஹோற்சவ கால தெய்வீகப் பேருரை"
பொருள்;
"கந்தபுராணம்"
நிகழ்த்துபவர்:
வாகீச கலாநிதி
கனகசபாபதி நாகேஸ்வரன் எம் ஏ

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
— அறங்காவல் சபை

(36069)

# ACALOM
கல்வி நிலையம்
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

**96 A/L** அளவையியல்
A. பிரபாகரன்
ஆரம்பம்: **06-04-95** வியாழன் பிற்பகல் 4-00 மணி

**96 A/L** புவியியல்
K. பார்த்திபன்
ஆரம்பம்: **08-04-95** சனி பிற்பகல் 4 00 மணி

[சி-966]

வடமராட்சியில்
## புதிய பயிற்சி வகுப்புக்கள்

காலம்: **4 — 6** கிழமைகள்
ஆரம்பம்: **09 — 04 — 95**
திருமதி யோகினி சண்முகநாதன் அவர்களிடம் பயிற்சி பெற்ற சிறந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்.

★ Icing (கேக் அலங்காரம்),
★ Sugar Craft (வெல்ல மலர் அலங்காரம்),
★ Fonden Icing (மேலைத்தேய ஐசிங் வகைகள்),
★ Cookery (சமையற் பாகங்கள்),
★ Flower making (பூ செய்தல்),
★ Knitting & Lace making (பின்னல் வேலைகள்),
★ Hair style & make up (தலை அலங்காரமும் ஒப்பனை முறைகளும்)

08 - 04 - 95க்கு முன் கீழ்கண்ட முகவரியில் பெயர்களைப் பதிவு செய்க.

செல்வி ம. கிருஷ்ணபிள்ளை
பொன்மொழிபாரகம்
வதிரி, கரவெட்டி.
[Becon Tuition அருகாமையில்]

செல்வி தி. தியாகராஜா
புற்றளை வீதி,
புலோலி தெற்கு,
புலோலி.

[சி-905]

சுன்னாகம்
ஸ்ரீ சந்திர சேகர விநாயகர் தேவஸ்தான கொடியேற்ற
## விஞ்ஞாபனம்

| | |
|---|---|
| கொடியேற்றம் | 6-4-95 வியாழன் காலை 11 மணி |
| வசந்தோற்சவம் | 11-4-95 செவ்வாய் மாலை 5 மணி |
| தேர் | 14-4-95 வெள்ளி காலை 10.15 மணி |
| தீர்த்தம் | 15-4-95 சனி காலை 9 மணி |
| பூங்காவனம் | 16-4-95 ஞாயிறு மாலை 4 மணி |

மகோற்சவக் குருக்கள்:
சிவஸ்ரீ சோ. சந்திரகாந்த குருக்கள்

ஆன்மீகத் தொடர் விரிவுரை
"தேன் தமிழ் பரிதி"
**ஆறு. திருமுருகன் B. A**
நேரம் இரவு 8—9 மணி
விடயம்: சம்பூரண ராமாயணம்

பிரசங்க முடிவில் பரீட்சை நடைபெறும். இதில் விசேட சித்தி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப் படும்.

விளம்பர அன்பளிப்பு,
சக்தி மருந்தகம்
சுன்னாகம்

(சி/5791)

தென் இந்தியத் திருச்சபை
யாழ். ஆதீனம்
## பெண்கள் ஐக்கியம்
நடத்தும்
மானிப்பாய் தொழிற் பயிற்சி நிலையத்தின்
(கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை வளாகத்தில்)
# சான்றிதழ் வழங்கலும் பொருட்காட்சியும்

**06 — 04 — 95 வியாழன் மாலை 3 மணி**
சிறப்பு விருந்தினர்: திருமதி V. ஜெபநேசன்
(தலைவி, பெண்கள் ஐக்கியம், தென் இந்தியத் திருச்சபை)

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்
திருமதி I. ஜெயக்குமாரன்

குறிப்பு:
கண்காட்சி 07-04-95 வெள்ளிக்கிழமை மாலை 4 மணி வரை நடைபெறும். தையல், கைப்பணி, மனையியல் கேக் ஐசிங், சிகை அலங்காரம் ஆகிய துறைகளில் புதிய ஆறு மாத பயிற்சி நெறியில் சேர விரும்புவோர், ஏப்ரல் 6 ஆம், 7 ஆம் திகதிகளில் மேற்படி நிலையத்தில் பதிவு செய்யலாம்.

(சி-967)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடகர்குழாம் உறுப்பினர்களாகிய
செல்வன் அமல்ராஜ் பொன்கலன்,
செல்வி றுக்ஷினி பொன்கலன்
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி வினிபிறட். பொன்கலன்**
மறைவினால் அவர்களது குடும்பத்தவருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவித்துக் கொள்ளுகிறோம்

புனித சிசிலியாள் பாடகர்குழாம்
புனித யுவானியார் ஆலயம்
சுண்டிக்குளி.

(36077)

## கண்ணீர் அஞ்சலி

எமது சகோதர கல்லூரியின் முன்னாள் அதிபர்
**திருமதி**
**பாக்கியலக்ஷ்மி இராஜேந்திரசிங்கம்**
அவர்களின்

மறைவை வானொலியிற் கேட்டுப் பேரதிர்ச்சியும், வேதனையும் அடைந்துள்ளோம் எமக்கு தேவையான வேளைகளில் உதவி ஒத்தாசை நல்கியவர். அவரின் மரணச் சடங்கு கொழும்பில் நடைபெறுவதால் நாம் நேரடியாக எம் இறுதி அஞ்சலிகளைச் செலுத்த முடியாமைக்கு வருந்துகிறோம். அவரது ஆன்மா சாந்தி அடைய வேண்டும் எனப் பிரார்த்திப்பதோடு, அவரது மறைவால் ஆற்றொணாத் துயரிலிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைச் செலுத்துகிறோம்.

உடுப்பிட்டி அ. மி. கல்லூரி,
உடுப்பிட்டி அ. மி. கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்.

(36067)

## ஆலயங்களில்

யாழ். வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையம் நடத்தும் ஸ்ரீ காமாட்சி இசை அரங்கு நிகழ்வில் இன்று வியாழக்கிழமை இரவு 7-30மணிக்கு செல்விகள் க. பிறேமினி, சு. கலைச்செல்வி, சு. தேவகி ச. அருந்ததி ஆகியோரின் பாட்டு இடம்பெறும். (இ-14]

★ ★ ★

நல்லூர் பண்டாரக்குளம் மருதவளவு ஸ்ரீ விநாயகர் ஆலய உற்சவத்தை ஒட்டி இடம்பெற்று வரும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் இன்று வியாழக்கிழமை இரவு 8மணிக்கு திருமதி ஸ்ரீகௌரி கிருபானந்தன் பாட்டு 8-30 மணிக்கு திரு வர்ணராமேஸ்வரன் பாட்டு என்பன இடம் பெறும். (இ-14-111)

★ ★ ★

சண்டிலிப்பாய் அருள்மிகு சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற உள்ளது.

ஏப்ரல் 15 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்த திருவிழாவும் நடைபெறும். [இ-152]

★ ★ ★

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் நடைபெற்று வரும் கந்தபுராண படனத்தில் இன்று வியாழக்கிழமை காலை 7 மணி தொடக்கம் சூரபத்மன் வதை படலம் நடைபெறும்.

★ ★ ★

நல்லூர் வடக்கு ஸ்ரீசந்திர சேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 9மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும்.

தொடர்ந்து எதிர்வரும் புதுவருட தினத்தன்று இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

★ ★ ★

அராலி அகாயக்குளம் பிள்ளையார் கோயில் வருடாந்த உற்சவம் இன்று வியாழக்கிழமையன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று இம்மாதம் 14 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 15 /ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். [இ-135]

## பாடசாலைகளில்

யாழ் இந்து ஆரம்பபாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அரங்கில் அதிபர் திரு. கா. தவராசா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். றோட்டறிக் கழகத் தலைவர் திரு. ஈ. சரவணபவனும், கௌரவ விருந்தினராக நல்லூர் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. இராஜமணியும் சிறப்பு விருந்தினராக நல்லூர் — மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு ப. சங்கரும் கலந்துகொள்வர்

திருமதி யசோதை சரவணபவன் பரிசில்களை வழங்குவார். (இ-14]

★ ★ ★

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வன்மை போட்டிகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். கல்வி பணிப்பாளர் திரு. க. கந்தசாமி கலந்துகொள்வார்.

★ ★ ★

எழுதுமட்டுவாழ் வடக்கு மருதங்குளம் அ. த. க. பாடசாலை இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் திரு. கு. கதிர்காம சேகரர் தலைமையில் நடைபெறும். முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்விக்கோட்ட உதவிப் பணிப்பாளர் யோ. யோன்பிள்ளை கலந்து கொள்வார். [இ-117]

## சோனியாவை சந்தித்தார் ஸ்ரீமானி

இந்தியா சென்றிருந்த போக்குவரத்து அமைச்சர் ஸ்ரீமானி அத்துலத் முதலி சோனியா காந்தியை சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின் போது சோனியா காந்தியிடம் உள்ள ராஜீவ் காந்தி சம்பந்தமான சுமார் 15 ஆயிரம் படங்களை ஸ்ரீமானி பார்வையிட்டார்.

ஸ்ரீமானி சோனியாவை சந்தித்த மறுநாளே சந்திரிகா சோனியாவை சந்தித்தார்.

நல்லூர்
விநாயகர் விளையாட்டுக் கழகம்
நடத்தும்
மாபெரும்
## கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி
**[ SETUP ]**

மேற்படி கழகத்தின் சுற்றுக் கேடயத்திற்கான போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் கழகங்கள் **15 - 04 - 95** முன்பாக விண்ணப்பக் கட்டணம் **100/-** செலுத்தி விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பப் படிவம் கிடைக்கும் இடம்:-
விநாயகர் களஞ்சியம்
பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு.

குறிப்பு: அரை இறுதி, இறுதி ஆட்டம் மின்னொளியில் இடம்பெறும்.

தலைவர்
விநாயகர் வி. கழகம்
விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு.

அன்பளிப்பு:
**துர்க்கா பல்பொருள் வாணிபம்**
பருத்தித்துறை வீதி, நல்லூர் மார்க்கெட்,
கல்வியங்காடு. [36071]

# இன்று முதல் ஆரம்பம்

திருமறைக் கலாமன்றம்
வழங்கும்
# 'அன்பில் மலர்ந்த அமர காவியம்'
[பக்தி — இசை — உரை — நாடகம்]
ஏப்ரல் 6,7,8,9, ஆம் திகதிகளில்
மன்ற அரங்கில்

தினமும் மாலை 7.15 மணிக்கு ஆசனப் பதிவுகளை முன் கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

திருமறைக் கலாமன்றம்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (சி-908)

உ
ஓம் சாயிராம்
## 16 — ம் நாள் நினைவு அஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

தோற்றம்: 14 — 12 — 1942



மறைவு: 23 — 03 — 1995

அமரர்
**சேனாதிராஜா இராஜலிங்கம்**
[சுங்கப் பரிசோதகர் - கொழும்பு]

"அழுகையில் ஆரம்பிக்கும் வாழ்க்கை புன்னகையில் முடிய வேண்டும். நீங்கள் பிறந்தவுடன் அழும்போது உங்களைச் சுற்றியிருந்தவர்கள் புன்னகை புரிந்தனர். ஆனால் நீங்கள் இறக்கும்போது அமைதியான முடிவை தேடியதற்காக நீங்கள் புன்னகை புரியவேண்டும். உங்களைச் சுற்றியிருப்போர் உங்களை இழந்ததற்காக அழவேண்டும்". - பாபா -

அழுகிறோம்...... அழுகிறோம்..... முடியவில்லை.
-குடும்பத்தினர்-

கடந்த 23 - 3 - 95 இல் கொழும்பில் காலமான எமது அன்புத் தலைவரை வைத்தியசாலையிலும், ஜெயரட்னா மண்டபத்தில் இறுதி அஞ்சலிக்காக வைத்த போது உதவியவர்களுக்கும், அஞ்சலி செலுத்தியோருக்கும், அவரது உடலை கொழும்பிலிருந்து இல்லத்திற்குக் கொண்டுவர உதவியோருக்கும், எமது துக்கத்தில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

எமது அன்புத் தெய்வத்தின் [பாஷாண உத்தாபனக் கிரியைகள்] கல்லுப்பூஜை 6 - 4 - 95 வியாழன் காலை 7 மணிக்கும், 7 - 4 - 95 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு [சபிண்டீகரணக் கிரியைகள்] வீட்டுக்கிருத்தியக் கிரியைகளும், தொடர்ந்து பிரார்த்தனைகளும் நடைபெறும். வீட்டுக் கிருத்தியக் கிரியைகளிலும், பிரார்த்தனைகளிலும் கலந்துகொண்டு மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம்
திருமதி ஆ. இராசலிங்கம்
இ. பராபரன் [நோர்வே]
இ. கமலா
இ. சாயிபரன்
இ. கயாநந்தி

"ஆனந்த கிரி"
தாவடி,
கொக்குவில். [36076]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம சேவையாளரிடம் அடையாள அட்டைகள்

## மேலதிக அரச அதிபர் தகவல்

தற்போது பதிவுத் தபால் கட்டணம் ரூபா 10-50 சதமாக அதிகரித்துள்ளதனால் 27-03-95 இல் அரச செயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ள அடையாள அட்டைகளை, உரியவர்களுக்கு அனுப்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அதனால் அவை தற்போது விண்ணப்பதாரர்களது பிரிவு கிராம சேவையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும்—

உரியவர்கள் நேரில் சென்று அவற்றை பெற்றுக் கொள்ளும் படியும்— மேலதிக அரச அதிபர் அறிவித்துள்ளார்.

தற்போது ஏற்பட்ட தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக கொழும்பில் இருந்து யாழ். செயலகத்திற்குஎடுத்து வரப்பட்ட அடையாள அட்டைகளில் பெரும்பகுதியை உரியவருக்கு அனுப்பி வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும்—

இவற்றை பிரதேச செயலகங்களூடாக கிராம சேவையாளர்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்— 3-4-95 திகதிய உதயனில் ஏற்கனவே செய்தி வெளியாகி இருந்தது தெரிந்ததே. (இ 5)

## ரூ. 5 லட்சம் பெறுமதி மிக்க

# காசோலையை திருடிய இளம் பெண் கைதானார்

கொழும்பு ஏப். 6

மதுபான உற்பத்தியுடன் தொடர்புடைய தனியார் கம்பனி ஒன்றின் நிர்வாக இயக்குநரிடம் இருந்து 5 லட்சம் ருபா பெறுமதியான காசோலையை களவாடிய 24 வயது இளம் பெண் ஒருவரை பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

இப் பெண் குறிப்பிட்ட நிர்வாக இயக்குநரின் அந்தரங்கச் செயலாளர் ஆவார்.

கொழும்பில் உள்ள தலைமைக் காரியாலயத்தில் நிர்வாக இயக்குநரின் மேசை மீது காசோலை இருந்த சமயமே திருடப்பட்டுள்ளதாகவும்—

அக் காசோலையை மாற்றி சுமார் 3 இலட்சம் ருபாவுக்கும் அதிக பெறுமதியான ஆடம்பரப் பொருள்கள் மற்றும் ஆபரணங்கள் உட்பட பல பொருள்களை இவர் வாங்கியுள்ளதாகவும் பொலீஸார் தெரிவித்தனர்.

இப் பெண் திருமணம் ஆகாதவர் என்பதும் — கம்பனி உயர் அதிகாரி ஒருவரின் மிகவும் நம்பிக்கைக்குப் பாத்திரமான செயலாளராக இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-5)

## படையினருக்கு பயிற்சி

மட்டக்களப்பு, ஏப். 6

மட்டக்களப்பில் படை முகாம்கள் பலப்படுத்தப்பட்டு வரும் அதேவேளையில் படையினருக்கு பயிற்சிகளை வழங்கும் நடவடிக்கைகளும் இடம் பெறுகின்றன.

மட்டக்களப்பின் இராணுவ, பொலீஸ், அதிரடிப் படை முகாம்களில் சகல படையினருக்கும் விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட இந்தப் பயிற்சி நடைமுறைகள் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப் படுகிறது. (ஒ-7)

## திருமணத்திற்கு நிதி உதவி

சேமநல முகாம்களில் வாழும் இளைஞர், யுவதிகள் திருமணம் செய்யும் போது அவர்களுக்கு நிதி உதவி வழங்கப்பட உள்ளது.

இந் நிதி உதவியினை புனர் வாழ்வு அதிகார சபை வழங்கும்.

இரண்டு வருடங்களுக்கு மேல் சேமநல முகாம்களில் வாழ்ந்து வருவோர் இந் நிதி உதவியைப் பெற முடியும்.

தம்பதியர் ஒவ்வொருவருக்கும் 12 ஆயிரத்து ஐநூறு ருபாய் வழங்கப்படும். (ஒ-5)

## கொழும்பில் பலத்த மழை

கொழும்பு, ஏப். 6

கொழும்பில் கடந்த திங்கள் இடிமுழக்கத்துடன் கூடிய மழை பெய்ததால் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டன.

பலமான காற்றினால் மரங்கள் முறிந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## ஜெயலலிதா மீதான வழக்கு விவகாரம்:

# ஆளுநர் ரெட்டி எடுத்த முடிவிலே மத்திய அரசு சம்பந்தப்படவில்லை

## புதுடில்லியில் அறிவிப்பு

புதுடில்லி, ஏப். 6

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மீதான ஊழல் புகார்கள் சம்பந்தமாக அவருக்கு எதிராக ''கிரிமினல்'' வழக்குத் தொடர, ஜனதா கட்சித் தலைவர் டாக்டர் எம். சுப்ரமணிய சுவாமிக்கு, தமிழக ஆளுநர் டாக்டர் எம். சென்னாரெட்டி அனுமதி வழங்கி அறிவித்த முடிவுக்கும், மத்திய அரசுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. இவ்வாறு இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது.

முதல்வர் மீது வழக்குத் தொடர அனுமதிப்பது பற்றி தமிழக ஆளுநர் மத்திய அரசிடம் எந்தவித கோரிக்கையும் வைக்கவில்லை என்றும்—

மத்திய அரசு அது பற்றி எந்தவித அனுமதியும் வழங்கவில்லை என்றும் — உள்துறை அதிகாரி ஒருவர், அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே அனைத்திந்திய அ.தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நேற்று சென்னையில் நடைபெற இருந்தது.

அக் கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சருக்கு தமது முழு ஆதரவையும் வழங்குவதை உறுப்பினர்கள் உறுதிப்படுத்துவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

# தமிழக காங். தலைவர் நேற்று டில்லி புறப்பாடு

புதுடில்லி, ஏப் 6

தமிழக சட்டப்பேரவை காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களின் ராஜினாமாக் கடிதங்களோடு, சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் நேற்று புதுடில்லிக்குச் சென்றார்.

சட்டப்பேரவையில் இருந்து இராஜினாமா செய்வதற்கு, கட்சியின் அகில இந்திய தலைமை அனுமதியை அவர் கோருவார்.

ஒரு வார காலம் சட்டப் பேரவையின் 'பட்ஜட்' கூட்டத் தொடரை புறக்கணிப்பது என்றும் காங்கிரஸ் கட்சியினர் முடிவு செய்துள்ளனர்.

சட்டப் பேரவையில், ஜனநாயக ரீதியில் சுதந்திரமாக செயல்பட முடியவில்லை என்றும் —

எதிர்க்கட்சிகள் கருத்துக்களைக்கூற அனுமதிக்கப்படுவதில்லை என்றும் —

இதற்கு ஆட்சேபம் தெரிவித்து, இராஜினாமாச் செய்ய தனது கட்சி முடிவெடுத்தது என்றும் — திரு. பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவிற்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுக்கள் மீது வழக்குத் தொடர, டாக்டர் சுப்பிரமணியம் சுவாமிக்கு ஆளுநர் அனுமதி அளித்துள்ள நிலையில, முதலமைச்சர் தானாக பதவி விலகி விசாரணையை சந்திக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த விசாரணையை நடத்த சிறப்பு நீதிமன்றம் ஒன்றை அமைக்குமாறு பிரதமர் பி வி நரசிம்மராவிடம் தாம் நேரடியாக கேட்டுக் கொள்ளப் போவதாகவும் அவர் கூறினார். (இ 5)

## நினைவு தின சிரமதானம்

யாழ்ப்பாணம், ஏப் 6

அன்னை பூபதியின் ஏழாம் ஆண்டு நினைவாக இடம் பெற்று வரும் நிகழ்வுகளில், நாளை வெள்ளிக்கிழமை கொக்குவில் இந்து மயானம், நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தினரால் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படும்.

★ ★ ★

கரவெட்டி மூத்த விநாயகர் ஆலய யாழ் விதிப்பகுதி கொலின்ஸ விளையாட்டுக் கழக அங்கத்தவர்களினால் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்படும்.

★ ★ ★

அளவெட்டி கலைநகரில் நினைவுக் கருத்தரங்கும் வீடியோ காட்சியும் இடம் பெறும். (இ-14)

## ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 6

1991 ஒகஸ்டில் நடைபெற்ற கிராம உத்தியோகத்தர்களுக்கான போட்டிப்பரீட்சையில் சித்தி பெற்று நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய பின் இதுவரை நியமனம் வழங்கப்படாத நிலையில் உள்ளவர்கள் தமது நிலை குறித்து யாழ். அரச அதிபருக்கு மகஜர் ஒன்றைச் சமர்ப்பிக்க உள்ளனர்.

இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நன்று, எதிர் வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ் செங்குந்த இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது

நேர்முகப் பரீட்சைக்கு தோற்றி நியமனம் கிடைக்காத அனைவரையும் அதில் கலந்து கொள்ளுமாறு கூட்ட அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர். [ஜ]

## லங்கா சிமெந்து சம்பள கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஏப். 6

லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்களின் மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான சம்பளக் கொடுப்பனவும். புதுவருட முற்பணமும் யாழ். வர்த்தக வங்கியில் நாளை வெள்ளியன்று காலை 9 மணி முதல் மாலை 2 மணிவரை வழங்கப் படும்.

## வியாகுல மாதா திருநாள்

யாழ்ப்பாணம், ஏப். 6

இளவாலை புனித அன்னம்மாள் ஆலய வியாகுல மாதா திருநாள் நாளை வெள்ளிக்கிழமை கொண்டாடப்படும். [இ-7]

# சமாதானப் பேச்சுக்கள் தொடர வேண்டுமாயின் ஜனாதிபதியே துணிந்து முடிவு எடுக்க வேண்டும்

## "திவயின" பத்திரிகைக்கு லோறன்ஸ் திலகர் பேட்டி

டென்மார்க் தலைநகர் கொப்பனஹேகனில் அண்மையில் உலக சமூக அபிவிருத்திக்கான உச்சி மாநாடு நடைபெற்ற போது ஐரோப்பாவில் உள்ள விடுதலைப் புலிகளின பிரதிநிதி திரு லோறன்ஸ் திலகர் அங்கு வைத்து ''திவயின'' பத்திரிகையின் பிரதிநிதிக்கு அளித்த விசேட பேட்டியின் தமிழாக்கத்தை இங்கே தருகிறோம்

★ கேள்வி: தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையே இடம் பெறும் சமாதானப் பேச்சுக்களின் தற்போதைய நிலை என்ன?

★ திலகர்: ''நான்காம் கட்ட சமாதானப் பேச்சுக்கான திகதியை அரசாங்கம் தீர்மானிக்கும் வரை நாங்கள் காத்திருக்கிறோம். அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள் மீதான தடைகளை முற்றாக நீக்குதல், வடபகுதி மக்கள் தென் பகுதிக்குச் செல்லும் வகையில் பாதை ஒன்றைத் திறத்தல்; மீன்பிடி தொடர்பான தடைகளை நீக்குதல் ஆகியன தீர்வு காணப்பட வேண்டிய விடயங்களாகும். அரசாங்கம் இவற்றை நிறைவேற்ற உடன்பட்டுள்ளது. உடன்பாடு காணப்பட்ட விடயங்களை அமுல்படுத்த வேண்டும். அரச தரப்புப் பிரதிநிதிகளின் வரவை விடுதலைப் புலிகள் எதிர்பார்த்த வண்ணமுள்ளனர்.

★ கேள்வி: நான்காம் கட்டப் பேச்சுக்கள் எப்போது இடம்பெறும் என நீங்கள் நினைக்கிறீர்கள்?

★ திலகர்: எங்களுக்குத் தெரியாது; அரசு தான் திகதியைத் தீர்மானிக்க வேண்டும். அவர்கள் தான் பேச்சுக்கு வரவேண்டும்.

★ கேள்வி: பேச்சுக்கள் தடைப்பட்டுள்ளன போன்று தெரிகிறது. இதற்கான காரணம் என்ன?

★ திலகர்: ஜனாதிபதி சந்திரிகாவுக்கு பலவேறு அழுத்தங்கள் கொடுக்கப்படுகின்றன என நான் நினைக்கிறேன். இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி முதலில் அதிக அக்கறை காட்டினார். கொழும்பிலுள்ள தொடர்பு சாதனங்களும் இராணுவமும் ஜனாதிபதிக்கு அதிகளவில் அழுத்தம் கொடுத்துள்ளன. ஜனாதிபதி இவ்வழுத்தங்களுக்கு அடிபணிந்துள்ளார் என நாங்கள் நினைக்கிறோம்.

★ கேள்வி நீங்கள் கூறுவது போல் ஜனாதிபதி அழுத்தங்களுக்கு அடிபணிந்திருப்பின் அரசாங்கத்திற்கு உடன்பாட்டைத் தெரிவிப்பதைத் தவிர நீங்கள் வேறு என்ன செய்வீர்கள்?

★ திலகர்: பேச்சுவார்த்தைகள் தொடர வேண்டுமாயின் ஜனாதிபதி ஏதாவது துணிகர முடிவை மேற்கொள்ள வேண்டும்.

★ கேள்வி: இருப்பினும் அரசின் நிலைப்பாடு தெளிவாக உள்ளது போல் தெரிகிறது பூநகரி முகாமை அகற்றுவது தவிர்ந்த ஏனைய கோரிக்கைகளை நிறைவேற்றியுள்ளதாக அரசு கூறுகிறதே.

★ திலகர்: மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான எரிபொருள், உரம் ஆகியன முக்கிய இடத்தை வகிக்கின்றன.

★ கேள்வி: தேவையான பல பொருள்களைக் கொண்டு செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அரசு கூறுகிறதே?

★ திலகர்: அவை சிறுவிடயங்கள். எரிபொருள் இல்லாமல் மின்சாரம் கிடைக்காது. இந்நிலையில் எந்தவொரு அபிவிருத்தியையும் மேற்கொள்ள முடியாது. உதாரணத்திற்கு, அரசினால் இரண்டு மின்பிறப்பாக்கிகள் வழங்கப்பட்டன. ஆனால் எரிபொருள் இன்றி அவற்றை எவ்வாறு இயங்கச் செய்வது? விவசாயத்திற்கு நீரை இறைப்பதற்குக் கூட நீர் இறைக்கும் இயந்திரங்களுக்கு எரிபொருள் வேண்டும்.

★ கேள்வி:- அபிவிருத்தி நடவடிக்கைகளை அரசு நேரடியாக மேற்கொள்வதை விடுதலைப்புலிகளின் தலைமை விரும்பவில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளதே இதில் உண்மையுள்ளதா?

★ திலகர்:- விடுதலைப் புலிகள் இதை விரும்பாதது இயற்கையானதே. முன்னைய அரசு வெளிநாட்டு உதவிகளைப் பெற்றது. வடக்கு-கிழக்கில் சிங்கள மக்களைக் குடியமர்த்துவதற்கும் தெற்கில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கும் அந்நிதி பயன்படுத்தப்பட்டது இக்காரணத்தினாலேயே வடபகுதி அபிவிருத்தி அரசாங்கத்தினாலும் விடுதலைப்புலிகள் அமைப்பினாலும் மேற்கொள்ளப்படவேண்டும் எனக் கூறுகிறோம். அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் புனர்நிர்மாணம் அல்லது அபிவிருத்தி தொடர்பான குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளோம் அப்போதுதான் கிடைக்கும் நிதி உரிய முறையில் செலவிடப்படும்.

★ கேள்வி:- விடுதலைப் புலிகளும், ஜனநாயக வழிமுறையில் ஈடுபட்டுள்ள தமிழ் பிரதிநிதிகளும் அடங்கிய அபிவிருத்திக் குழு அமைக்கப்பட வேண்டும் என அரசு யோசனை தெரிவித்துள்ளதே?

★ திலகர்:- இது அரசு மேற்கொண்ட தனிப்பட்ட முடிவாகும். இதுபற்றி விடுதலைப் புலிகள் அமைப்புடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு அமைக்கப்படும் குழுவில் விடுதலைப் புலிகளும் அரசும் சம எண்ணிக்கையில் பிரதிநிதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

★ கேள்வி:- அவ்வாறான குழுவை அமைப்பதற்கு இரு தரப்பினருக்கிடையே உடன்பாடு காணப்பட வேண்டுமென நீங்கள் கூறுகிறீர்களா?

★ திலகர்:- நான்காம் கட்டப் பேச்சுவார்த்தையின் போது அதைச் செய்ய முடியும். பொதுமக்களைப் பாதிக்கும் பிரச்சினைகள் பற்றி அப் பேச்சின்போது கலந்துரையாடப்பட வேண்டும்.

★ கேள்வி:- அபிவிருத்திக் குழுக்களில் விடுதலைப்புலிகள் அமைப்பின் பிரதிநிதிகளும் சேர்க்கப்படுவர் எனவும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அவர்கள் பங்குபற்ற இடமளிக்கப்படும் எனவும் ஸ்ரீலங்கா அரசு தெரிவித்துள்ளது. இது பற்றிய தங்கள் கருத்து என்ன?

★ திலகர்:-இரு தரப்பிலும் சம எண்ணிக்கையைக் கொண்ட பிரதிநிதிகள் சந்தித்து இப் பிரச்சினை குறித்துக் கலந்துரையாடலாம் என விடுதலைப்புலிகள் கூறுகின்றனர். இது தொடர்பான பேச்சுக்களையோ அல்லது நடவடிக்கைகளையோ அரசு இதுவரை மேற்கொள்ளவில்லை.

★ கேள்வி:- அரசாங்கத்தின் யோசனைகளுக்கு உங்களிடமிருந்து ஆக்கபூர்வமான பதிலேதும் கிடைக்கவில்லையென அரசு கூறுகிறதே?

★ திலகர்: குழு அமைக்கப்பட வேண்டும் என்ற யோசனையே விடுதலைப் புலிகள் முன் வைத்த ஒன்றாகும். புனர் நிர்மாணப் பணிகளை விரைவுபடுத்த இக்குழு அமைக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

★ கேள்வி: இக்குழுக்களில் ஏனைய தமிழ்க் குழுக்களும் இடம்பெற வேண்டும் என எதிர்பார்க்கிறீர்களா?

★ திலகர்: இல்லை. நாங்கள் விடுதலைப்புலிகள் அமைப்பைப் பற்றியே விசேடமாகக் குறிப்பிடுகிறோம். பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமாயின் அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையேதான் பேச்சுவார்த்தைகள் இடம்பெறவேண்டும்.

★ கேள்வி: இந்த அபிவிருத்திக் குழுக்களுக்கு ஏனைய தமிழ்க் குழுக்களின் தேவை அவசியமற்றது எனக் கூறுகிறீர்களா?

★ திலகர்: ஆம். வேறு தமிழ்க் குழுக்களின் பிரதிநிதிகள் சேர்த்துக் கொள்ளப் படக் கூடாது.

★ கேள்வி: ஏன் அப்படிக் கூறுகிறீர்கள்?

★ திலகர்: தற்போது விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையேதான் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன. இப் பேச்சுவார்த்தைகளின் பிரதிபலனாகவே இக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன. எனவே இக் குழுக்களில் அரசு, விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளே இடம் பெறவேண்டும். இது எமது கோரிக்கைகளில் ஒன்றாகும்.

★ கேள்வி: ஏனைய குழுக்களை அதாவது ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து கொண்ட கட்சிகளில் இருந்து தமிழ்ப் பிரதிநிதிகளை அபிவிருத்திக் குழுக்களில் சேர்க்கவில்லை என அரசு மீது குற்றஞ் சுமத்தப்பட வாய்ப்புகள் உள்ளனவே?

★ திலகர்: அதுவேறு பிரச்சினை. மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கும், இனப் பிரச்சினைக்கும் தீர்வினைக் காணுவதே இப் பேச்சுக்களின் நோக்கம் இந்தப் பேச்சுக்களை ஆரம்பித்ததே இந்த அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கேயாகும்.

★ கேள்வி: கடந்த பொதுத் தேர்தலின் போது கிழக்கு மாகாணத்தில் த. ஐ. வி. முன்னணி பெருமளவிலான வாக்குகளைப் பெற்றிருக்கையில் விடுதலைப் புலிகள் அமைப்பை மாத்திரமே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என ஏற்றுக்கொள்வது சரியானது என நீங்கள் நினைக்கிறீர்களா?

★ திலகர்: இந்த புனர் நிர்மாண நடவடிக்கைகள் பற்றிய யோசனையை அரசுதான் விடுதலைப் புலிகளிடம் முன் வைத்தது. விடுதலைப் புலிகளும் தங்கள் ஒப்புதலைத் தெரிவித்தனர். இரு தரப்பாராலும் இது மேற்கொள்ளப்பட வேண்டுமென உடன்பாடு எட்டப்பட்டது. பேச்சுவார்த்தைகளை முடித்து அரச குழு கொழும்பு திரும்பியதும் இந்த நிலைமையில் மாற்றம் ஏற்பட்டது

★ கேள்வி: நீங்கள் இந்தக் கோரிக்கையை எழுத்து மூலமாக அரசுக்கு முன் வைத்தீர்களா?

★ திலகர்: நான்காம் கட்டப் பேச்சுவார்த்தைகளுக்கு முன்னர் இக்குழுக்கள் அமைக்கப்படவேண்டும என எமது தலைவர் பிரபாகரன் அரசுக்கு எழுத்து மூலமாகத் தெரிவித்துள்ளார்.

★ கேள்வி: இவ்விடயத்தில் ஏனைய தமிழ்க் குழுக்களை ஒதுக்குவது நியாயமானதாக உங்களுக்குத் தோன்றுகிறதா?

★ திலகர்: அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையேயான பேச்சுவார்த்தைகளும் உடன்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. ஆயுதப் போராட்டங்களும் எங்கள் இரு தரப்பினருக்குமிடையே தான் இடம்பெறுகின்றன. எனவே ஆயுதப் போராட்டத்திற்கான தீர்வும், இனப் பிரச்சினைக்கான தீர்வும் இரு தரப்பாராகிய எங்களாலேயே முன் வைக்கப்படவேண்டும்.

★ கேள்வி: சமாதானத் தீர்வில் விருப்பங் கொண்டவர்கள் ஒதுக்கப்பட்டனர் என தென் பகுதியிலிருந்து அரசு மீது குற்றஞ் சுமத்தப்படுகிறது. இது பற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

★ திலகர்: ஆயுதப் போராட்டத்தில் ஒன்று சேராத காரணத்தினாலேயே அவர்கள் ஒதுக்கப்படுகிறார்கள். இந்த ஜனநாயகச் செயற்பாட்டு வழிமுறைகள் பற்றி பின்னர் பேசப்பட வேண்டும். மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கும் யுத்தத்திற்குமான தீர்வினைக் காண்பதுவுமே எமது முக்கிய விடயங்களாகும். நாங்கள் முதலில் அவற்றை நிறைவேற்றுவோம். புனர் நிர்மாணப் பணிகளை முதலில் ஆரம்பிப்போம். காரணம் அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட துன்பகரமான யுத்தத்தின் பிரதிபலன்களே இவையாகும். இவை தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளாகும்.

★ கேள்வி: அதிகாரம் பரவலாக்கப்படுமாயின் விடுதலைப் புலிகள் அமைப்பு ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து கொள்ளுமா?

★ திலகர்: இனப்பிரச்சினைக்குத் தீர்வினைக் காண்பதே முக்கிய பிரச்சினையாகும். அதன் பின்னர் எமது அமைப்பு ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து கொள்ள முடியும்.

★ கேள்வி: நல்லது – அவ்வாறெனின் ஸ்ரீலங்கா அரசுக்கு நீங்கள் முன் வைக்கும் தீர்வு என்ன?

★ திலகர்: சமஷ்டி அமைப்பு ஒன்றை உருவாக்கி இப் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு முன் வந்தால் அது பற்றி விடுதலைப் புலிகள் ஆராய்வர் எனத் தெரிவித்துள்ளோம். இதன்படி இவ்வாறான திட்டத்தை கவனத்தில் எடுக்க நாங்கள் தயார்.

★ கேள்வி: இவ்வாறான திட்டம் சாதகமாக அமையாவிடின் இனப்பிரச்சினையின் தீர்வாக உங்கள் திட்டம் என்ன?

★ திலகர்: தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் விதத்தில் தீர்வினை முன் வைக்குமாறு நாங்கள் தொடர்ந்து அரசிடம் கோரி வருகிறோம். அரசாங்கமே முதலில் தீர்வினை முன் வைக்க வேண்டும். அது ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதா? இல்லையா என்பதை நாங்கள் தீர்மானிப்போம்.

★ கேள்வி: வடக்கில் ஜனநாயக வழிமுறையிலான தேர்தல் நடத்தப்படுமாயின் நீங்கள் அதற்கு ஒத்துழைப்பை வழங்குவீர்களா?

★ திலகர்: தற்போது தேர்தல் தவிர்ப்பு மாத்திரமே நடைமுறையில் உள்ளது. இந்த நிலை நிரந்தரமான போர் நிறுத்தமாக மாற்றப்பட வேண்டும்; அதன் பின்னரே அரசியல் தீர்வு காண்பது தொடர்பான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் ஜனநாயக ரீதியான தீர்வு குறித்துப் பேச முடியும். ஜனநாயக முறையிலான அரசு ஒன்றுக்கு நாங்கள் முற்றிலும் உடன்பாடானவர்களே எமது மக்களில் 85 வீதமானோர் விடுதலைப் புலிகளை ஆதரிக்கின்றனர். போராட்டத்தை நாங்கள் இவ்வளவு காலம் தொடர்ந்து மேற்கொள்வதற்கு தமிழ் மக்களின் ஒத்துழைப்பே காரணமாகும்.

★ கேள்வி:- நீங்கள் மக்கள் முன்வைக்கும் அரசியல் திட்டம் எவ்வாறானதாக இருக்கும்?

★ திலகர்;-அது ஜனநாயக வழிமுறையில் அமைந்ததாக இருக்கும். சுதந்திரமான நாடொன்றுக்காகவே நாங்கள் போராடினோம். அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள எமது நிலையிலிருந்து இறங்கி வந்துள்ளோம். அரசின் திட்டம் என்ன என்பது குறித்து தெரிந்து கொள்ள வேண்டும். பேச்சுவார்த்தைகளின் பிரதிபலன் எவ்வாறு அமையினும் நாங்கள் ஜனநாயக வழிமுறைக்கு வருவோம்.

★ கேள்வி: தற்போது விடுதலைப் புலிகளிடம் எந்தவிதமான அரசியல் கொள்கைத் திட்டங்களும் இல்லை. அப்படித்தானே?

★ திலகர்: இல்லை பண்டைக் காலத்தில் தமிழ் மக்களிடம் சுதந்திர அரசு இருந்துள்ளது. எமக்கென ஆட்சி முறை இருந்தது.

எமது அரசும் பல்வேறு தரப்பினரைக் கொண்டதாகவும் பேச்சுரிமை உட்பட ஏனைய சுதந்திரங்களைக் கொண்ட ஜனநாயக அரசாக விளங்கும். பொருளாதாரத்தைப் பொறுத்த வரையில் சுதந்திர வர்த்தகக் கொள்கையைக் கொண்டிருக்கும். சுதந்திர நாட்டின் அரசியல் சமூகக் கொள்கைகள் இவையே. (ஜ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

**கோழிக்குஞ்சு விற்பனை**

நல்லின லோமன் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. குஞ்சு ஒன்றின் விலை ரூபா 15/-. உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன், மல்வம் வீதியூடாக, சிங்கம் வீதி, உடுவில். [36044]

நல்லின புறொயிலர் இறைச்சிக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன் மல்வம் வீதியூடாக, சிங்கம் வீதி, உடுவில். [36045]

செற்றா பாம் வெள்ளை பேட்டுக்குஞ்சுகள், கோல்டன் கொமற் சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. சிந்து பல்பொருள் விற்பனை நிலையம், திருநெல்வேலிச் சந்தி. [36039]

**எரு விற்பனைக்கு**

மாட்டெரு விற்பனைக்குள்ளது. "மிலக்வைற்" (சி-903)

**வகுப்புகள்**

கேக் ஐசிங், மாச்சினி அலங்காரம், Fondant Icing, ஒப்பனைக்கலையும், தலையலங்காரம், பூ அலங்காரங்கள், மலர்ச்செண்டுகள் தயாரித்தல் (Silk Ribbon, Stocking Net. Bouquets) புதிய வகுப்புக்கள் 16-4-95 முதல் ஆரம்பமாகிறது தொடர்பு: Yogi Home Science Academy நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட் (முத்திரைச் சந்தையடி), நல்லூர் (சி 634)

**மணமக்கள் தேவை**

சுதேச வைத்திய தொழில் புரியும் ஆண், பெண் மணமக்கள் தேவை. முழுவிபரங்களுடனும் சாதகத்துடனும் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். இல. 775, மே/பா உதயன், யாழ்ப்பாணம் [36065]

**கண்டெடுக்கப்பட்டது**

எமது நிலையத்தில் பணத்துடன் கூடிய பேர்ஸ் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். ஞானம் ஆடையகம், 54, சோதியா தெரு, யாழ்ப்பாணம். [சி-960]

## பாடசாலைகள் 26 ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 6

யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளும், இரண்டாம் தவணைக்காக இம் மாதம் 26ஆம் திகதி புதன்கிழமை மீண்டும் ஆரம்பமாகும் என்று, கல்வித் திணைக்களத்தின் வலயம் 1, வலயம் 2 கல்விப் பணிப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.

மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்குடனே இம் முடிவு எடுக்கப்பட்டதாகவும்—

இதற்கமைய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும்— பாடசாலை அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (இ 5)

## சுவரொட்டிகள்

கொழும்பு, ஏப். 6

1971 ஏப்ரல் கிளர்ச்சியின் 24 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு கொழும்பில் ஜே வி பி யின் பெயரால் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

ஏப்பிரல் கிளர்ச்சியின் 24 ஆவது நினைவு தினம் ஏப்ரல் 5" என்று அதில் எழுதப்பட்டுள்ளது. (இ)

## வாகன சாரதி அனுமதிபத்திரம்

யாழ்ப்பாணம், ஏப். 6

ஸ்ரீலங்கா வாகன சாரதி அனுமதிப்பத்திரத்தை இதுவரை புதுப்பிக்காதவர்கள் இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் தமிழீழ நிர்வாக சேவை மோட்டார் வாகனப் பிரிவில் புதுப்பித்துக் கொள்ளல் அவசியம்.

இதுவரை சாரதி அனுமதிப்பத்திரம் பெறாதோர் அதற்குரிய படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து தமிழீழ வாகன சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளவும்.

இவ்வாறு தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

---

**தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்**
யாழ். கோட்டம்

## அறிவித்தல்

### அன்னைபூபதி விழா

இவ்விழாவை யாழ். கோட்டத்தில் சிறப்பாக நடத்துவதற்கு தனியார் கல்வி நிறுவன இயக்குநர்களும் பிரத்தியேக வகுப்பு நடத்துபவர்களும் மாசி மாத திரட்டிய மொத்த நிதியில் இருந்து ஒரு (1%) வீதத்தை விழா நிதியாக வழங்க வேண்டும். ஆகக் குறைந்த நிதியாக ரூபா 100 செலுத்தப்படல் வேண்டும்.

இந் நிதியை எதிர்வரும் 10-04-95க்கு முன்னர் அலுவலகத்தில் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

நன்றி
இரா. செல்வவடிவேல்
தலைவர்
(யாழ் கோட்டம்)

[சி-904]

---

# நிர்மாணி

## நிர்மாணத் துறைசார் இதழ் மாதாந்த வெளியீடு

விரைவில் வெளிவரவுள்ள நிர்மாண துறைசார்ந்த மாதாந்த சஞ்சிகைக்கு தங்களின் பொறியியல் துறை சார்ந்த ஆக்கங்களை அனுப்பி வைக்கவும். இத் துறையில் ஈடுபடுவோர் தமது சேவைகளை விளம்பரப்படுத்த விரும்பின் உடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

முதல் இதழ் வருடப்பிறப்போடு வெளிவரவுள்ளது. இதில் பின்வரும் கட்டுரைகள் அடங்கும்.

- புனரமைப்பு வேலைகளும் போக்குவரத்து தடைகளும்
- நிர்மாணத்துறையும் இன்றைய நிலையும்
- மேல் செலவுகளும் மதிப்பீடும்
- கிளிநொச்சி நகர் திட்டமிடல் - நோக்கு
- 1000 வீடுத்திட்டம் - வன்னிமாவட்டம்
- வேலை மேற்கொள்வோர் பதிவுகள்
- அபிப்பிராயக் கடிதங்கள்
- செய்திகள்

உங்கள் பிரதியை உறுதிப்படுத்துவதற்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்


வெளியிடுவோர்;

பொறியியல்துறை,
தமிழீழ நிர்வாக சேவை,
நடுவப் பணியகம்,
தமிழீழம்.

[சி-899]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



**நாகலிங்கம் தர்மலிங்கம் செல்லத்துரை JP**
(முன்னாள் உதவி மேயரும், பிரபல சமூக சேவையாளரும்)

தோற்றம்: 08—05—1918 மறைவு: 17-04—1994

**திதி: 06 - 04 - 1995**

எங்கள் குடும்பக் குலவிளக்காய் மலைமேற் தீபம் போல் பிரகாசித்து, அன்பு மழை பொழிந்து, அமுத மொழி பேசி ஆசைக்கரம் நீட்டி எங்களையெல்லாம் நல்வழிப்படுத்திய அன்புத் தெய்வமே! அப்பாவே அப்பப்பாவே இறப்பு இயற்கையானது தான் எங்களை நினைத்து வாழ்ந்த நீங்கள் எப்பொழுதும் எங்களையே சுற்றி நிற்பீர்கள் காலன் உங்களை எங்களிடமிருந்து பிரித்தாலும், உங்கள் நினைவு எங்கள் இதயங்களில் ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் நிலைத்துநிற்கும்

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

"செல்வமாளிகை"
5, யாழ் வீதி,
யாழ்ப்பாணம்.

(36027)

---

உடுவில்
கல்வியங்காடு
**பத்திரகாளி உடனுறை ஸ்ரீவீரபத்திர சுவாமி கோயில்**

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

வீரபத்திரர் அடியார்களே!

06-04-95 வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பதின்மூன்று தினங்கள் நடைபெறும்,

06—04—95 — கொடியேற்றம்
13—04—95 — சப்பறத்திருவிழா
14—04—95 — ரதோற்சவம்
15—04—95 — தீர்த்தோற்சவம்
16—04—95 — பூங்காவனத்திருவிழா

**மஹோற்சவ கால இசைப்பேருரை**
தினமும் மாலை 7-30 — 8-30வரை நடைபெறும்
நிகழ்த்துபவர்:
கான கதா வாரிதி
ப்ரம்மஸ்ரீ சிவ வை. நித்தியானந்த சர்மா அவர்கள்

மஹோற்சவம் சிறப்புற வாழ்த்துவோர்:
**திரு. நா. ஜெயகுலராசா**
உரிமையாளர் யசோ பந்தல் சேவை
வாசிகசாலையடி, கல்வியங்காடு.
(36062)

---

## G. A. Q. 1st IN COM.
(யாழ். பல்கலைக்கழகம் வெளிவாரி)

மேற்கூறப்பட்ட பாட நெறிக்கான விண்ணப்பங்கள் பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.

விவரங்களுக்கு:

**S. அருள்நங்கை**
**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி-962)

---

## உலக சுற்றாடல் தினப் போட்டிகள்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல் பாதுகாப்பு பகுதி உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு சிறுகதை, கவிதை, கட்டுரை, கருத்துப் படம் போன்ற போட்டிகளை நடத்தவுள்ளது. இப் போட்டிகளின் ஆக்கங்கள் யாவும் சூழல் பாதுகாப்பின் அவசியததை எடுத்துக் காட்டுவனவாக அமைதல் வேண்டும்.

✶ சிறுகதை ✶ கட்டுரை
✶ கவிதை ✶ கருத்துப்படம்

**போட்டிகளில் கலந்து கொள்வோர் கடைப்பிடிக்க வேண்டியவை;**

★ வட தமிழீழ மக்கள் அனைவரும் வயது வேறுபாடின்றி கலந்து கொள்ளலாம்.
★ ஆக்கங்கள் யாவும் சூழலின் பாதுகாப்பினை சித்திரிக்கும் வண்ணம் அமைய வேண்டும்.
★ ஆக்கங்கள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
★ சிறுகதைகள் யாவும் 1,500 சொற்களுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.
★ கவிதைகள் 30 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
★ கட்டுரைகள் நான்கு பக்கங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
★ கருத்துப் படங்கள், ஓவியங்கள், சூழல் பாதுகாப்பினை சித்திரிப்பதாகவோ பொருண்மிய வளர்ச்சியினை மேம்படுத்துவதாகவோ இருத்தல் வேண்டும்.
★ படைப்பாளரின் பெயர், முகவரி என்பன தனித்தாளில் எழுதப்படுவதுடன் படைப்பாளர் தமது சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.
★ போட்டிக்கான ஆக்கங்கள் அனைத்தும் மே 05 ஆம் திகதிக்குப் பிந்தாமல் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முதன்மைச் செயலகத்திற்கு அனுப்புதல் வேண்டும் பிந்திக் கிடைக்கும் ஆக்கங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.
★ நடுவர்களின் தீர்ப்பே முடிவானதும் இறுதியானதும் ஆகும்.
★ போட்டி முடிவுகள் யாவும் 01-06-1995 தினசரி பத்திரிகைகளில் அறிவிக்கப்படும்.

இப் போட்டிகளில் வெற்றியீட்டும் போட்டியாளர்களுக்கான பரிசில்கள் யாவும் ஜூன் 05 ஆம் திகதி நடைபெறும் உலக சுற்றாடல் தின விழாவின் போது வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் "உலக சுற்றாடல் தினம்" ஜூன் 05 என கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிக்கப்பட்டு,

**சூழல் பாதுகாப்புப் பகுதி**
**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,**
முதன்மைச் செயலகம், தாவடி,

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
[சி-895]

---

## அநாதரவானபெண்களுக்கு றெட்பானா உதவித்திட்டம்

றெட்பானா நிறுவனம் அநாதரவான பெண்களின் உதவித் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் இவ்வாண்டு மேலும் 60 பெண்களைச் சேர்த்துக் கொள்ள இருக்கின்றது.

அநாதரவான பெண்களின் விவரங்கள் தொடர்பாக கோப்பாய், நல்லூர் பிரதேச செயலர்களிடமிருந்து ஏற்கனவே பெறப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் இவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர்.

புதிதாக தெரிவு செய்யப்படவுள்ள பெண்கள் றெட்பானாவின் தற்போதைய திட்டத்திலுள்ள ஒரு குழு நிலை செயல்பாட்டிற்கு உள்ளடக்கப்பட்டு அவர்களுக்கான உதவி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. ஏற்கனவே றெட்பானா ஸ்தாபனத்தின் உதவித் திட்டத்தில் நல்லூர், கோப்பாய் பிரதேச செயலர்பகுதிகளில்200 பெண்கள் பயன் பெற்று வருகின்றனர்.

இதேவேளை அநாதைச் சிறுவர் செயல் திட்டத்தின் கீழ் மேற்குறிப்பிட்ட பிரதேச செயலர் பகுதியில் பாதுகாவலர்களின் பராமரிப்பிலுள்ள 15 அநாதைச் சிறுவர்கள் புதிதாக சேர்த்துக் கொள்ளப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆஸ்பத்திரி ஊழியருக்கு சுழற்சி முறையில் பணி

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் சிற்றூழியர்களுக்கு இம் மாதம் முதலாம் திகதி தொடக்கம் சுழற்சிமுறைக் கடமை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஆறு மாதங்களுக்கு ஒரு முறை சுழற்சிமுறை மாற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

சிற்றூழியர்களில்பெரும்பாலானோர் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த சுழற்சி முறைக் கடமை மாற்றம் குறித்து கூடுதலானோர் அதிருப்தி தெரிவிக்கின்றனர் சுமார் 40 வீதமானோர் மட்டுமே புதிய சுழற்சிமுறையைப் பாராட்டும் நிலையிலுள்ளார்.

சிற்றூழியர்களின் ஒரு சாரார் பல வருடங்களாக சிரமமில்லாத சுகமான பணிகளைச் செய்யும் விதத்தில் அவர்களுக்கு பணிப்பிரிவுகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

சுழற்சிமுறை மாற்றத்தின் கீழும் மேற்கூறிய வகையினரில பலரின் கடமைப் பிரிவுகள் மாற்றப்பட்ட போதிலும் முன்னரைப் போல இலகுவான பணிகளைச் செய்ய வசதி செய்யப்பட்டுள்ளது.

இதே வேளை, நீண்டகாலமாக சிரமமான கஷ்டமான பணிகளைச் செய்வோரில் பலரும் சுழற்சி முறையின் கீழும் அதே போன்ற பணிகளைச் செய்ய வேண்டிய பிரிவுகளுக்கே மாற்றப்பட்டுள்ளர்

இதனால் புதிய சுழற்சி முறைக்குப் பாதகமாகவும், சாதகமாகவும் சிற்றூழியர் மட்டத்தில் கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. (அ-ந)

### சிகிச்சை இடைநிறுத்தம்

பிரான்ஸ் வைத்தியக் குழுவினரால் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நடத்தப்பட்டு வரும் முறிவு, நெரிவு சத்திர சிகிச்சைப் பிரிவு கடந்த 4 ஆம் திகதி முதல் மறு அறிவித்தல் வரை நடைபெறமாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வைத்தியக் குழு அதிகாரிகள் விடுமுறையில் கொழும்பு சென்றுள்ளதால் இப்பிரிவின் செயற்பாடு தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

## கணவன்-மனைவி இடையே புரிந்துணர்வு அவசியம்

### குடும்ப நிலைய திறப்பு விழாவில்உரை

யாழ்ப்பாணம், ஏப். 6

எமது சமூகத்திலே குடும்பம் ஒன்றில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு அடிப்படைக்காரணமாக அமைவது குடும்பத்தில் கணவன் மனைவியரிடையே காணப்படுகின்ற நம்பிக்கையீனங்களும், ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளாமையுமாகும். இவை அவர்கள்மத்தியிலிருந்து களையப்படும் போது குடும்பம் பிரகாசமானதாக அமையும்.

இவ்வாறு தெரிவித்தார் கலாநிதி வண. எஸ். செல்வரட்ணம் அடிகள்.

அண்மையில் குருநகர் பாங்சால் வீதியில் அமைந்துள்ள குடும்பவளத்துணை நிலைய திறப்புவிழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வண. பிதா எஸ்.ஜே. இமானுவல் தலைமையில் நடந்த இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ் மறைமாவட்ட போராயர் அதி வண. கலாநிதி தோமஸ்சௌந்தரநாயகம் ஆண்டகை கலந்து கொண்டார்.

முன்னதாக யாழ். ஆயர், வண பிதா எஸ். ஜே இமானுவல்,வண பிதாஎஸ் ஜெபநேசன், வண. பிதா அன்ரன் ராஜநாயகம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து யாழ் ஆயர் அதி வண. கலாநிதி தோமஸ்சௌந்தர நாயகம் ஆண்டகைமேற்படி நிலையத்தை நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

யாழ் ஆயர். வண. பிதா. எஸ் ஜே இமானுவல் நிலைய இயக்குனர் எஸ் ஜே ராசநாயகம் ஆகியோரும் உரையாற்றினர். [ஐ-7]

---

## நீ கலைஞன் வாழுகிறாய்

எங்கள் 'தளிர்'களுக்காய் ஈனவிழியோடுழைத்த
தங்கமே! நண்ப, சிவானந்தா! இங்குனக்குத்
திங்கள் ஒன்று போயிற்றாம்! மரணம் என்ன -
ஆயிற்றாம்?

எங்களுடன் என்றும் இருப்பாய்,

'லும்பினி' மண்டபத்தில் நீ நடித்த நாடகத்தைத்
தம்பியடா பார்த்துத் தான் விறைத்தேன் -
நம்புவனோ

செத்தான் 'சிவா' என்று! நீ கலைஞன் வாழுகிறாய்
பொய்த்திடுமே சாவின் பொருள்!

— சத்தியசீலன்

[36064]

---

யா/புங்குடுதீவு
**ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம்**
**பழைய மாணவர் சங்க வருடாந்தப்**

## பொதுக் கூட்டம்

இடம்: யா/புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலய மண்டபம்

காலம்: 07-04-95 வெள்ளிக்கிழமை
பி. ப. 3 00 மணி

பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கூட்டத்திற்கு தவறாது சமுகம் தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- தலைவர்.

(36052)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
392/2 காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்

## அகதிகளின் பொதிகள்

தமிழகத்திலிருந்து தாயகம் திரும்பிய அகதிகளில் ஒரு சாரார் உண்ணாவிரதம் இருக்கவுள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. தாம் அங்கிருந்து கொண்டு வந்த பொதிகளை சுங்கப்பகுதியினர் திருகோணமலைத் துறைமுகத்தில் தடுத்து வைத்திருப்பதற்கு ஆட்சேபம் தெரிவிக்குமுகமாகவே, அவர்கள் உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்தனர்.

ஈழப்போர் இரண்டு ஆரம்பமானதை அடுத்து, இராணுவத்தின் அக்கிரமத்திலிருந்து தப்புவதற்காக, தங்கள் உயிர்களைக் காப்பாற்றினால் போதும் என்ற நிலையில் படகுகளில் அகதிகளாகச் சென்றவர்களே இவர்கள்.

கடந்த ஐந்து வருடங்களாக, தமிழகத்தில் அவர்கள் பட்ட கஷ்டங்கள், துன்பங்கள் எழுத்தில் வடிக்க முடியாதவை. தமது சொந்த மண்ணை விட்டுச் சென்ற 'பாவ'த்துக்காக, பிறர் மண்ணில் அவர்கள் மனிதர்களாக மதிக்கப்படவில்லை.

ஈழத் தமிழ் அகதிகளைப் பெரும் சுமையாகவும், தொந்தரவாகவும், தொல்லையாகவும் கருதி பலவந்தப்படுத்தி வெளியேற்றுவதற்கு தமிழக அரசு நடந்து கொண்ட மனிதாபிமானமற்ற முறையை மறந்துவிடுவதற்கில்லை. அவசியப்பட்ட நேரத்தில் புகலிடம் அளித்த ஒரு நன்மையைவிட தமிழக அரசு ஏனைய எல்லா அம்சங்களிலும் ஆவேசமாகப் பாதகமாகவே நடந்து கொண்டது எனலாம்.

அங்கிருந்து தாயகம் திரும்பியவுடன் தங்கள் வாழ்க்கையை நடத்துவதற்குரிய நிதிப்பலம் அகதிகளுக்கு இல்லை. அதனால், தாம் தமிழகத்தில் வாழ்ந்த கடந்த ஐந்து வருடங்களிலும் சிறுகச் சிறுக சேமித்த வருமானத்தைக் கொண்டு கொள்வனவு செய்த சில பொருள்களையும், தாம் அங்கு பயன்படுத்திய தட்டுமுட்டுச் சாமான்களையும் கொண்டு வந்திருக்கிறார்கள். தமிழகத்தில் தங்கியிருந்த அகதிகள் அங்கு பணம் சம்பாதிருந்தால், அவர்களுக்கு இந்தப் பொருள்களை எடுத்து வந்து விற்று, தமது அன்றாட வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது.

இந்த விடயம் இலங்கை அரசாங்க அதிகாரிகளுக்குத் தெரியாது என்பதல்ல. ஆனால் நாடு திரும்பிய அகதிகள், சில வர்த்தகப் புள்ளிகளின் முகவர்களாக இருந்து கொண்டு, பெருந்தொகைப் பெறுமதி உள்ள பொருள்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று வாதாடுகின்றனர்.

அகதிகள் இப்பொருள்களைக் கொண்டு வருவதற்கு இந்திய அரசு அனுமதித்து விட்டது. அந்த அரசு ஏற்பாடு செய்த கப்பலிலேயே அவர்கள் இப்பொருள்களை எடுத்து வந்திருக்கிறார்கள். சட்டவிரோதமாக எதனையும் எடுத்து வரவில்லை.

இந்தியாவிலிருந்து இலங்கைக்குள் வந்து சேரும் பொருள்கள், உள்வரும் அந்நியச் செலவாணியாகக் கருதப்பட வேண்டும். அகதிகள் தமிழர்கள் என்பதால் அரச அதிகாரிகள் அப்பொருள்களை கடத்தல் சாமான்களாகக் கருதுகிறார்களா?

இது விடயத்தில் அதிகாரிகள் தமது சொந்த விருப்பு வெறுப்புக்கு ஏற்ப மெத்தனப் போக்குடன் நடந்து கொள்ள அனுமதிப்பது அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மையையே காட்டுகிறது.

தமிழ்ப் பகுதிகளில் அமைதி ஏற்பட்டு விட்டது: அகதிகள் திரும்பி வரலாம் என்று பச்சைக் கொடி காட்டும் அரசு, இங்கு வரும் அகதிகள் தமது அன்றாட வாழ்க்கையைத் தொடங்குவதற்குக் குந்தகம் விளைவிக்கிறது.

ஏனைய விவகாரங்களில் நடந்து கொள்வது போலவே, அகதிகள் விடயத்திலும் அரசு இரட்டை வேடம் போடுகிறது. இதனைக் கண்டிக்கிறோம். அவர்களைக் கடத்தல்காரர்களாகத் தாழ்த்திப் பார்ப்பது நிறுத்தப்பட வேண்டும். அகதிகள் தமிழகத்திலிருந்து கொண்டு வந்த பொதிகளை வழங்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல நசுக்க முற்படக் கூடாது.

நேர்மையான அதிகாரிகள் இல்லை:

## விசேட புலனாய்வுப் பிரிவை அமைக்க முடியாத நிலை!

கொழும்பு, ஏப். 6

விசேட புலனாய்வுப் பொலீஸ் பிரிவை அமைப்பதில் அரசுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொலை, கொள்ளை போன்ற சம்பவங்கள் குறித்து விசேட விசாரணைகள் நடத்த புலனாய்வுத் துறை ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்தது.

அந்தத் துறைக்கு சிறந்த அதிகாரிகளை நியமிக்க அரசு முயற்சி செய்தாகவும்—

நேர்மையான அதிகாரிகள் கிடைக்காததால் அந்தத் துறையை ஆரம்பிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும்— அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர்தரத்தில் உள்ள அதிகாரிகள் ஒன்றில் லஞ்சம் பெறுபவர்களாகவோ அல்லது சொந்த வாழ்வில் தவறு செய்தவர்களாகவோ உள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-3)

## நூற்றாண்டின் தேவைக்கு ஏற்ப கல்வி முறை மாற்றம்

### அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப் 6

21ஆம் நூற்றாண்டின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் கல்வி முறை ஒன்று கொண்டு வரப்பட இருக்கிறது.

இது தொடர்பாக தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை ஒன்றை தயாரித்துள்ளது என்றும் —

பல கல்விமான்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் இத்துறைசார் நிபுணர்கள் இந்த அறிக்கையை ஆராய இருப்பதாகவும் — கல்வி உயர்கல்வி அமைச்சர் திரு. ரிச்சர்ட் பத்திரன தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்களுக்கு தேசிய போதனா டிப்ளோமா சான்றிதழ்களை வழங்கும் வைபவம் ஒன்று கொழும்பு பண்டார நாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் நடைபெற்றது.

அவ் வைபவத்தில் பேசும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(இ-5)

## இசையரங்கில் இன்று

யாழ்ப்பாணம், ஏப். 6

நல்லூர் பண்டாரக்குளம் மருதவளவு ஸ்ரீ விநாயகர் ஆலய உற்சவத்தை முன்விட்டு ஆலய தர்மகர்த்தா சபையினரும், யாழ். அண்ணாமலை இசைத்தமிழ் மன்றமும் இணைந்து வழங்கும் தெய்வீக இசையரங்கில் இன்று வியாழக்கிழமை இரவு 8-00 மணிக்கு ஸ்ரீகௌரி சிருபானந்தன், 8-30 மணிக்கு வர்ணராமேஸ்வரன் ஆகியோர் பாடுகிறார்கள்.

## உதவித் தபாலதிபர்கள் பரீட்சையில் 15 பேர் சித்தி

யாழ்ப்பாணம், ஏப். 6

தபால் திணைக்களத்திலுள்ள சிற்றூழியர்கள், உபதபாலதிபர்களை — உதவித் தபாலதிபர்களாக தரமுயர்த்தும் பதவியுயர்வுப் போட்டிப் பரீட்சையில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 15 பேர் சித்தியடைந்துள்ளார்கள்.

தபால் திணைக்களத்திலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு சிற்றூழியர்கள், உபதபாலதிபர்கள் போன்ற தரத்திலிருந்து 25 விதமானவர்களைத் தெரிவு செய்வதற்காக கொழும்பில் இப்போட்டிப் பரீட்சை அண்மையில் நடைபெற்றிருந்தது.

## வெளிச்சம் இன்றி செல்லும் வாகனங்களால் விபத்துகள்

### குடாநாட்டில் அதிகரிப்பு

தென்மராட்சி, ஏப். 6

குடாநாட்டில் இரவு வேளைகளில் வெளிச்சம் இன்றிச் செல்லும் வாகனங்களால் வீதிகளில் இடம்பெறும் விபத்துச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இரவில் செல்லும் சில வாகனங்களில் ஒரு பக்க முன் வெளிச்சம் மட்டுமே காணப்படுகின்றது. இதனால் வீதிகளில் செல்லும் பாதசாரிகளும், சைக்கிளில் செல்வோரும், பெரும் ஆபத்துக்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வைக்கோல், தென்னம் மட்டைகள், தேங்காய் மட்டைகள் என்பனவற்றை ஏற்றிச் செல்லும் டிராக்டர்கள், லாண்ட் மாஸ்ரர்கள் என்பனவும் இரவு நேரத்தில் வெளிச்சம் இன்றி செல்வதை அதானிக்க முடிகிறது.

குறிப்பாக கண்டி வீதியில் இவ்வாறு செல்லும் வாகனங்களால் அடிக்கடி விபத்துச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. இது குறித்துப் பலரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

[ஐ-117]

மந்திகை வைத்தியசாலையில்

## சத்திரசிகிச்சைப் பிரிவு மற்றும் எக்ஸ்ரே பிரிவுகளில் வேலை பாதிப்பு

வல்வெட்டித்துறை, ஏப். 6

மந்திகை] அரசினர் ஆதார வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைப் பிரிவினதும் ''எக்ஸ்ரே'' பிரிவினதும் வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

மேற்படி வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைப் பிரிவைச் சேர்ந்த பிரெஞ்சு நாட்டு வைத்தியரான மேரி கிறிஸ்ரி கடந்த சனிக்கிழமை முக்கிய அலுவலாக கொழும்பு சென்றுள்ளார்.

அதேசமயம் — 'எக்ஸ்ரே' பிரிவின் பிரதம உத்தியோகத்தரும் சுகயீனம் காரணமாக லீவில் நிற்பதால் 'எக்ஸ்ரே' வேலைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட பிரிவுகளில் சிகிச்சை பெறவேண்டிய நோயாளர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கே செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மிகவும் மோசமான நிலையில் உள்ள நோயாளிகள் மட்டுமே வைத்தியசாலை அம்புலன்ஸில் யாழ்போதனாவைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

ஏனையோர் தமது சொந்தச் செலவிலேயே யாழ்ப்பாணம் வர வேண்டிய நிலை இருந்து வருகிறது. (இ-155)

## மத்தியஸ்தம் வகிக்க ஜப்பான் அரசு தயார்

### அந்நாட்டு எம். பி. தெரிவிப்பு

இலங்கை அரசு கோரிக்கை விடுக்குமாயின் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் மத்தியஸ்தராக செயற்பட ஜப்பான் அரசு தயாராகவுள்ளது.

கொழும்பு வந்துள்ள ஜப்பான் நாட்டு நாடாளுமன்ற உறுப்பினரான லசிமோபுபுடா முன்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜப்பான் நாட்டின் வெளியுறவு பொருளாதார அலுவல்கள் பணிப்பாளரும், ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சியின் வெளியுறவு அலுவல்கள் பிரிவின் பதில் தலைவருமான அவர் கொழும்பில் ஜப்பான் தூதரகத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்குகிழக்கு புனரமைப்பு பணிக்கும், பொருளாதார அபிவிருத்திக்கும் ஜப்பான் உதவத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

[ஐ-3-6]

ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு

## ஜெனரேற்றர் மற்றும் பொருள்கள் அனுப்ப முடிவு

யாழ்ப்பாணம், ஏப். 6

கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலைக்கு, ஜெனரேற்றர் மற்றும் தட்டச்சு இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள் ஆகியவற்றை அனுப்பி வைப்பதற்கு, கல்வி உயர்கல்வி அமைச்சு இணங்கியுள்ளது.

சென்ற மாதம், கோப்பாய் ஆசிரிய கலவசாலை அதிபர் திருமதி இராமநாதன், கல்வி உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரனவை சந்தித்து கலாசாலையில் நிலவும் குறைபாடுகளை எடுத்துக் கூறினார்.

இச் சந்திப்பு, இசுறுபாயவிலுள்ள கல்வி உயர்கல்வி அமைச்சின் சட்டடத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பின், பயனாகவே கலாசாலைக்கு மேற்குறிப்பிட்ட பொருள்களை வழங்குவதற்கான இணக்கம் காணப்பட்டது. [இ-5-4]

## அகதிகள் சென்றபடகுகள் இவ்வாரம் இலங்கை வரும்

கொழும்பு, ஏப் 6

இந்தியாவில் உள்ள இலங்கையருக்கு சொந்தமான 170 மீன் பிடிப் படகுகளும் இவ்வாரம் இலங்கைக்கு எடுத்து வரப்படவிருக்கின்றன.

இலங்கை அதிகாரிகளும், அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அதிகாரிகளும் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

தமிழகத்துக்கு சென்ற ஈழ அகதிகளுக்கு சொந்தமானவை இந்த படகுகள் என்பது குறிப்பிடத்தக்கது.

[இ-3]

மரமுந்திரிகை திட்டத்தின் கீழ்

## மட்டக்களப்பு பகுதிகளில் சிங்களவர் குடியேற்றம்

மட்டக்களப்பு, ஏப். 6

மட்டக்களப்பில் மரமுந்திரிகை பண்ணைகளை மீண்டும் அமைத்தல் என்ற போர்வையில், திட்ட மிட்ட சிங்களக் குடியேற்றங்களை அப்பகுதியில் அமைக்க அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இதன்படி மட்டக்களப்பில் உள்ள, மகாவலி 'பி' வலயத்தில், மரமுந்திரிப் பண்ணைகள் அமைக்கப்பட உள்ளன.

மரமுந்திரிகைச் செய்கையாளர்களுக்கு மானியமும் வழங்கப்பட உள்ளது.

[இ-5[

## யாழ். இந்துவின் நூற்றாண்டு மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப். 6

யாழ். இந்துக்கல்லூரியின் நூற்றாண்டு மலர் வெளியீட்டுவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு குமாரசுவாமி மண்டபத்தில் அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் திரு. க. பொன்னம்பலமும் சிறப்பு விருந்தினராக தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் திரு வெ. இளங்குமரனும் கலந்து கொள்வார். (இ-14)

## பண்ணிசை

யாழ்ப்பாணம் ஏப் 6

தொண்டமனாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை ஆதரவில் நடைபெறும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன ஓதுவார் திரு. சி. தில்லை மணியின் பண்ணிசை நிகழ்வு இடம் பெறும்.

அறிமுகவுரையை ஞான பண்டித இசையரசு சங்கீத பூஷணம் திரு. செ. குமாரசாமி வழங்குவார்.

(இ-14)

## மெய்வல்லுநர் போட்டி ஒத்திவைப்பு

இன்று நடைபெற இருந்த வேம்படி மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் தவிர்க்கமுடியாத காரணத்தால் ஒத்தி வைக்கப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வங்கிச் சிற்றூழியர் உண்ணாவிரதப் போர்

கொழும்பு, ஏப். 6

இலங்கை வங்கியில் பணியாற்றும் சுமார் 250 சிற்றூழியர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

15 வருட காலமாக சமயா சமய ஊழியர்களாகப் பணியாற்றும் தம்மை நிரந்தரமாக்க வேண்டும் என்று கோரியே அவர்கள் இப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு இலங்கை வங்கி தலைமையலுவலகத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் நடைபெறுகிறது.

கண்டி தொழில்நுட்பக்கல்லூரி

## பரீட்சை ரத்தானதால் தமிழ் மாணவர் ஏமாற்றம்

கண்டி, ஏப். 5

கண்டி எருக்கொல தொழில்நுட்பக்கல்லூரியில் தமிழ் மொழி மூலம் கணக்கியல் உயர்தேசிய டிப்புளோமா கற்கைநெறிகளை மேற்கொண்டுவரும் தமிழ் மாணவர்கள் தமது பரீட்சைக்காக கடந்த 27ஆம் திகதி பிரஸ்தாப கல்லூரிக்குச் சென்ற போது பரீட்சை திடீரென ரத்துச் செய்யப்பட்டதாக கல்லூரி அதிபரால் தெரிவிக்கப்பட்டது.

இதனால் மாணவர் ஏமாற்றமடைந்தனர்.

பாதிப்புற்ற மேற்படி மாணவர்கள் கண்டியிலுள்ள மனித உரிமைகள் பணிக்குழுவுக்கு புகார் செய்துள்ளனர்.

[ஒ-7]

## பழைய மாணவர் சங்கம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஏப். 6

கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பண வைபவம் கடந்த 26ஆம் திகதி நடைபெற்றது. சங்க உறுப்பினர் தெரிவும் இடம்பெற்றது.

## அதிபர் கூட்டம்

வலிகாமம் தெற்கு, ஏப். 6

உடுவில் கல்விக்கோட்ட அதிபர்கள் கலந்து கொள்ளும் கூட்டமொன்று பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ச. இரத்தினராசா தலைமையில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு நடைபெறும்.

[இ-152]

## புலிகளின் குரல் வானொலியில்

06 – 04 – 1995
வியாழன் இரவு

- ★ 8-02 — சொல்லுங்கள் பார்க்கலாம்
- ★ 8-10 — சித்தமருத்துவக் குறிப்புகள்
- ★ 8-20 — உழைப்போம் உயர்வோம் நிகழ்ச்சியில் ''சிக்கனம்'' குறநாடகம்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — மொழியும் வாழ்வும்
- ★ 6-50 — எங்களின் தேசம்

07 — 04 — 1995
வெள்ளி காலை

- ★ 7-02 — மாவீரவணக்கம்
- ★ 7-15 — மணியாரம்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — தாயகப்பாடல்கள்

## தமிழீழ வானொலி

ஒலிபரப்பு
வியாழன் மாலை

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — மழலைகளுக்காக
- ★ 5-30 — இசையும் கதையும்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சிலவிநாடிகள்
- ★ 6-02 — பொன் விளையும் பூமி
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — கேள்விபதில்
- ★ 6-25 — என்தெரிவு
- ★ 6-30 — நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

# மாற்று சக்தி வளங்களை இனங்காண்பது தமிழீழ தன்னிறைவுக்கு மிக அவசியமானது

எந்த ஒரு நாட்டிலும் அதன் பொருளாதாரம் சுட்டியெழுப்பப்பட வேண்டுமாயின் அதற்கு சக்தி தேவையானது அவசியமாகின்றது. அதனால் இன்று பல நாடுகள் தங்களது சக்தித் தேவையை பூர்த்தி செய்வதற்காக தமது பிரதேசங்களில் உள்ள சக்தி வளங்களை பயன்படுத்தி வருகின்றன. இதற்கு காரணம் தற்போது உலக நாடுகளில் எரிபொருள் பாவனை அதிகரித்துச் செல்கின்றதாலும், அது சில நாடுகளில் மாத்திரமே உற்பத்தி செய்யப் படுவதாலும், எரிபொருளை உற்பத்தி செய்யும் நாடுகளின் வளம் இப்போது வரையறுக்கப்பட்டிருப்பதாலும் தற்காலகைத் தொழில் துறையில் பெருகி வரும் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு எரிபொருள் கிடைக்காமல் போகலாம் என்பதாலாகும்.

இரண்டாம் உலகமகா யுத்த காலங்களில் போக்குவரத்துப் பாதைகள் தடைப்பட்டிருந்த நேரத்தில் கடற்கரை துறைமுகங்கள் அமைந்திராத பல நாடுகள் எரிபொருளை பெற்றுக் கொள்ள முடியாமலிருந்தது. இதனால் அந்த எரிபொருளுக்குப் பதிலாக தங்கள் பிரதேசங்களில் காணப்பட்ட இயற்கை வளங்களை பயன்படுத்தி தமது சக்தித் தேவையினைப் பூர்த்தி செய்து வந்துள்ளனர்.

ஆக்கிவாயு, இயற்கைவாயு, சூரியசக்தி ஆகியவற்றை அமைத்து தங்களது சக்தித் தேவையினை பூர்த்தி செய்தனர். இதனால் அந்த நாடுகள் போர்க்கால சூழ்நிலையிலும் தங்களது பொருளாதார அபிவிருத்திகளை மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது.

### ஸ்ரீலங்காவின் நிலை

ஆனால் ஸ்ரீலங்காவைப் பொறுத்தவரை நீர் மின்வலு மூலம் பெருமளவில் சக்தித் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது.

ஏனைய கைத்தொழில் பொருளாதார அபிவிருத்திகளுக்கு எரிபொருளைப் பயன்படுத்துகின்றனர்.

இதனால் இவர்கள் எந்தக் காலத்திலும் [illegible] நம்பியிருக்க [illegible] தேவை இருக்கிறது.

ஸ்ரீலங்கா பெருமளவில் எரிபொருளை இறக்குமதி செய்து களஞ்சியப்படுத்தி அதன் மூலம் தொழிற்சாலைகள், இயந்திரங்கள் போன்றவற்றை தொழிற்படுத்தி வருவதால் சில காலங்களின் பின் உலக நாடுகளில் எரிபொருளுக்கு நெருக்கடி ஏற்படுமிடத்து இங்கு இவர்களின் தொழிற்சாலைகள் இயங்க முடியாத நிலை ஏற்படலாம்.

அது பொருளாதாரமும் தளம்பல் நிலையை அடைய வாய்ப்பளிக்கும்.

பல நாடுகளில் பல லட்சம் ஆக்கிவாயு பிறப்பாக்கிகளை இப்போதும் களஞ்சியப்படுத்தி வைத்திருக்கிறார்கள் உலகில் எரிபொருளுக்கான நெருக்கடி நிலையொன்று ஏற்படுமிடத்து பொருளாதார கைத்தொழில் மையங்களை ஸ்தம்பிதமடையாமல் பாதுகாக்க முடியுமென்ற நம்பிக்கை அவர்களுக்கு இருக்கின்றது.

### தமிழீழ சக்தி வளங்கள்

இந்த வகையில் நாம் தமிழீ[illegible] சக்தித் தேவைகள் ஸ்ரீலங்கா அரசாங்கத்தினால் தான் நிர்ணயிக்கப்படுகின்றன. இங்கு பெருமளவில் சக்திவளங்கள் காணப்பட்டிருந்தும் நாம் அவற்றை பயன்படுத்தாமல் சிங்கள பகுதிகளிலிருந்து கிடைக்கும் நீர் மின்சாரத்தையை நம்பியிருக்கிறோம். அத்துடன் ஏனைய சக்தித் தேவைகளும் அங்கிருந்து கிடைத்த எரிபொருள் மூலமே பூர்த்தி செய்யப்பட்டு வந்தன.

இரண்டாவது ஈழப்போர் தொடங்கியதிலிருந்து எமது பிரதேசங்களுக்கு ஸ்ரீலங்கா அரசாங்கத்தால் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டது. அத்துடன் எரிபொருளும், மின்சாரமும் தடை செய்யப்பட்டன.

தமிழீழ மக்கள் பொருளாதார ரீதியில் வெகுவாகப் பாதிப்படைந்தனர்.

நாம் எமது சக்தித் தேவைகளுக்கு ஸ்ரீலங்கா அரசாங்கத்தை நம்பி இருந்ததால் இந்த நிலை எங்களுக்கு ஏற்பட்டது. அவர்கள் எந்தெந்த [illegible]களில் எம்மை அடிபணிய வைக்கலாமோ அந்தந்த ரீதியில் எம்மை நசிக்கி வருகிறார்கள். எனவே நாம் இதனை முறியடிக்க வேண்டுமாயின் தன்னிறைவான பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும். இதற்கு எமது பிரதேசங்களில் காணப்படும் சக்தி வளங்களை இனங்கண்டு அவற்றை பயன்படுத்த வேண்டும்.

### மாற்று வழி அவசியம்

இங்கு எவ்வளவோ சக்தி வளங்கள் காணப்படுகின்ற போது வீணாக அந்நிய நாட்டை ஏன் நம்பியிருக்க வேண்டும். ஸ்ரீலங்காவின் தற்போதைய எரிபொருல் தடை எல்வளவு காலத்திற்கு நீடிக்கும் என்பதை கவனிக்க முடியாது. தற்போது உலகில் உள்ள பேற்றோலிய வளம் சில நூற்றாண்டுகளில் இல்லாமல் போகும் அபாயம் உள்ளதால் இதற்கு மாற்று வழியை பல உலக நாடுகள் மெற்கொண்டு வரும் போது நாம் மட்டும் ஸ்ரீலங்காவை எதிர்பார்த்திருப்பது புத்திசாலித்தனமானதல்ல.

(தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்துக்கு எப்போது வருவீர்கள்?

## சந்திரிகாவிடம் கேள்வி

கொழும்பு, ஏப். 6
இந்தியாவுக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி சந்திரிகாவிடம் எப்போது தெற்குக்கு (தமிழகம்) வருவீர்கள் என்று ஜனதாகட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமி கேட்டதாக 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாவைச் கௌரவிப்பதற்காக புதுடில்லியில் ஏற்பாடு செய்யப்பட மதியபோசன விருந்திலேயே மேற்கண்டவாறுசுப்பிரமணிய சுவாமி கேட்டார்.

அதற்கு சந்திரிகா பதில் அளிக்கவில்லை என்றும் புன்முறுவல் பூத்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நரசிம்மராவும், சந்திரிகாவும் இந்த விருந்துக்கு தாமதமாகியே வந்தனர்.

[இ-3]

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப், 6
யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் அமரர் ஈ. கே. குமரையா ஞாபகார்த்தமாக நடத்திய உதைபந்தாட்டப் போட்டியில் தற்காலிகமாக இடை நிறுத்தி வைக்கப்பட்ட குழு நிலைப் போட்டிகள் இன்று வியாழக் கிழமை அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன,

இன்றைய ஆட்டங்களின் விவரம்வருமாறு:-

★ பிற்பகல் 3. 30 — சென் மேரிஸ் ஏ' அணி எதிர் பாடும் மீன் "பி" அணி.

★ பிற்பகல் 4. 30 — பாடும் மீன் 'ஏ' அணி எதிர் சென். நீக்கலஸ் அணி.

[ஐ-20]

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 6
தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் நடுவர் சங்கத்தை அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அரசியல் துறையின் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதுவரை நடுவர்களாகக் கலந்து கொண்ட அனைவரையும் கலந்துரையாடலில் பங்கு பற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது.

[ஐ]


## மரண அறிவித்தல்கள்

### சந்தியா அந்தோனிமுத்து

(சிங்கராசா)

சிங்கராசா என்று அழைக்கப்படும் அந்தோனிமுத்து 4-4-95ல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற ஞானஉதயத்தின் அன்புக் கணவரும், உதயகுமார் (பபி - யந்திரம்ஸ் கடைச்சல் தொழிற்சாலை), அன்புத் தந்தையும், இராசேஸ்வரியின் மாமனாரும், இராஜ்குமார், றோகன்ராஜ், தனராஜ் டிறோன்ராஜ் ஜீவராஜ் ஆகியோரின் பேரனும் நவாலி சந்தியா அருளப்பு, யோசப் (சின்னமணி) ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

இவரது பூதவுடல் ஸ்ரீபன் குடியிருப்பு, ஸ்ரேசனடி என்ற முகவரியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து இன்று (6-4-95) காலை 10 மணிக்கு நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்
அ. உதயகுமார்
மகன், (பபி)

(36073)

### திருமதி வினிபிறட் பொனகலன்

[பபி]

திருமதி வினிபிறட் பொன்கலன் [பபி] 5-4-95ல் காலமாகிவிட்டார்.

இவர் திரு. சைமன் விக்ரர் பொன்கலனின் அருமை மனைவியும், அமல்ராஜ் பொன்கலன் (A/L மாணவர் சம் த்திரிசியார் கல்லூரி. யாழ்ப்பாணம்), நச்ஷினி பொன்கலன் (A/L மாணவி திருக்குடும்ப கன்னியர்மடம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அருமைத்தாயாரும், காலஞ்சென்ற நியபோல்ட் அழகையா, மற்றும் பாக்கியம் ஆகியோரின் சிரேஷ்ட புத்திரியும், யோசப்சைமன், காலஞ்சென்ற மேரிபபிள்ளை ஆகியோரின் அருமை மருமகளும், ராஜ்குமார் (டுபாய்) அருட்சகோதரி யொய்ஸ்மாறி (A. C. கார்மேல் மடம் ஆசிரியை சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்), அனற் துரைராஜா டுபாய்), இவாஞ்சலின் அன்ரன் (பிரான்ஸ்), சகுந்தலா றொமேஷ் (கொழும்பு), கௌரிராஜன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அருமைச் சகோதரியும், மலர் ஜோண், றோஸ்சிலன், ராணி அன்ரன் ஆகியோரின் அருமைமைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவடல் இன்று 6-4-95வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் இவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு, புனித யுவானியார் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சைமன் பொன்கலன்
[கணவர்]

245, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

[3607]


# தமிழீழக் கல்வியின் நோக்கைப் புரிந்து அதற்காக உழைத்தவர் சிவானந்தன்

## இளம்பரிதி அஞ்சலி உரை

யாழ்ப்பாணம், ஏப். 6
அமரர் சிவானந்தன் தமிழீழக் கல்வியின் நோக்கத்தைப் புரிந்தவர். அந்த நோக்கத்தின் வளர்ச்சிக்காகவே உழைத்து வந்த அவரை எங்கள் தேசத்தின் பெரிய சொத்தாகவே நாம் பார்க்கிறோம்.

யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி இவ்வாறு தெரிவித்தார்.

அண்மையில் காலமான முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அமரர் இராமுப்பிள்ளை சிவானந்தனின் நினைவுக் கூட்டம் நேற்றுப் பிற்பகல் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு நினைவுரை ஆற்றியபோதே திரு. இளம்பரிதி முன்கண்டவாறு தெரிவித்தார்.

நினைவுக் கூட்டத்துக்கு தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் தலைவர் வண. பிரான்ஸிஸ் ஜோசப் அடிகள் தலைமை வகித்தார்.

திரு. இளம்பரிதி தமது நினைவுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

எங்களுடைய மண்ணிலே வாழ்வின அர்த்தத்தைப் புரியாது வாழ்வுக்கே குழி தோண்டுகின்ற சந்தர்ப்பங்கள் பல உண்டு பலர் அறிவியலற்ற மாயையிலே மயங்கிப் போகின்ற ஒரு சூழ்நிலையும் உண்டு

எல்லா மனிதர்களும் சமத்துவமாக — மனித மேம்பாட்டோடு — வாழவேண்டும் என்ற சமத்துவ சிந்தனைக்கு அப்பால் பலர் நிற்கின்ற இந்தச் சூழ்நிலையிலே அமரர் சிவானந்தன் வாழ்வின் அர்த்தத்தை புரிந்து கொண்டு தானும் வாழ்ந்து எமக்கும் வழிகாட்டினார்; எமது நாட்டுக்கும் வழிகாட்டினார்.

அதுபோன்று அறிவியல் உயர்விற்கும் அவர் ஆக்கங்கள் பல செய்தார். சமத்துவ சிந்தனை என்ற உயர்வான வாழ்வுக்கும் சிந்தனைக்கும் அவர் தன்னையே வரை விலக்கணமாக்கி நிற்கின்றார். அந்த வகையிலே அவருடைய இழப்பு எங்களுடைய போராளிகள் மனதிலே அல்லது எமது தலைமையினது மனத்தில் கூட தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கின்றது

நாளைய தமிழீழத்தை நாங்கள் நிர்மாணிக்கின்ற பொழுது அந்த தமிழீழ தேசியத்திற்கான கல்வித் திட்டத்தை வகுக்கின்ற சமயம் அதிலே அவர் ஒரு சரியான அடித்தளத்தை இடுவார் என்ற நம்பிக்கையை நாம் கொண்டிருந்தோம். அந்த நம்பிக்கை சிதறியபோது எங்களது நெஞ்சங்கள் துடித்தன. —என்றார்.

தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரன் தமது நினைவுரையில் தெரிவித்ததாவது:

தமது கடமைப் பட்டியலில் உள்ள செயற்பாடுகளோடு மட்டும் நின்று விடாமல் அதற்குப் புறம்பாக பல்வேறு செயற்பாடுகளைத் தானே வலிந்து தேடிச்சென்று அவற்றைச் செயற்படுத்தியவர் அமரர் சிவானந்தன்.

கல்வித் திணைக்களப் பணிகள், ஆரிப திராவிட பாஷா அபிவிருத்திச் சங்க செயற்பாடுகள், நுண்கலைமன்ற செயற்பாடுகள் ஆகியவற்றின் பொறுப்புக்களிலும் அவர் ஒரு நிறைவான பணியைச் செய்துள்ளார். சிறந்த செயல்வீரராகவும், கடும் உழைப்பாளியாகவும் அவர் விளங்கினார் —என்றார்.

நினைவுக் கூட்டத்தில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வனின் அஞ்சலிச் செய்தியை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி வாசித்தார்.

அமரர் சிவானந்தன் எழுதிய "கண்டறியாதது" என்ற நூல் அங்கு வெளியிடப்பட்டது.

வலயம் இரண்டு கல்விப் பணிப்பாளர் திரு. கே. கந்தசாமி நூலை வெளியிட்டார். யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

தமது கணவரின் உருவப்படத்துக்கு திருமதி முத்தாச்சி சிவானந்தன் மலர் மாலை அணிவித்தார்.

கல்விமான்கள் பலர் நினைவுரை ஆற்றினர்.

[ஐ-4-111]

## புலிகளின...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லளித்த கதிர்காமர் —

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை நாடு கடத்துவது பற்றி ஜனாதி தி சந்திரிகா குமாரதுங்கா இந்தியப் பிரதமருடன் பேச்சு நடத்தவில்லை என்றும் —

பிரபாகரனை கைது செய்ய உரிய நடவடிக்கைகளை இந்திய அரசாங்கம் எடுத்திருப்பதாக பிரதமர் நரசிம்மராவ் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் கூறியதாகவும் தெரிவித்தார்.

(ஐ-4-6

## நரோமா பயணிகளுக்கு

யாழ்ப்பாணம், ஏப். 6
இன்று இங்கிருந்து "நரோமா" கப்பல் மூலம் திருமலை செல்லவுள்ள பயணிகளை காலை 8 மணிக்கு பருத்தித்துறை துறைமுகத்தில் சமுகமளிக்குமாறு யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபர் அறிவித்துள்ளார்.

இதேவேளை—
எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள "நரோமா" கப்பல் சேவையில் பயணம் செய்யவிருக்கும் பயணிகள் எதிர்வரும் 10 ஆம் திகதி யாழ். செயலகத்துக்கு வந்து ஆசனப் பதிவுக்கான பணத்தைச் செலுத்துமாறும் கேட்கப்பட்டுள்ளது.

[ஐ-4]

## தெற்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

குடாநாட்டுக்கு ஒருபாதை திறக்கப்படவேண்டும் என்று பாப்பரசர் இலங்கை வந்த சமயம் முயற்சி எடுத்தோம். தொடர்ந்து அரசாங்கத்தை இந்த விடயமாக வற்புறுத்தி வருகிறோம்.

தற்சமயம் பிரச்சினையாக உள்ள பூநகரிப் பாதை விடயம், சமாதானத் திட்டம் உருவாகும்போது தீர்க்கப் பட்டுவிடும் என்ற நம்பிக்கை ஜனாதிபதிக்கு உண்டு.

தெற்கில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களும், அரசியல் தலைவர்களும் கிளாலி பாதையூடாக பயணம்செய்ய வேண்டும். கஷ்டங்களை நேரடியாக உணர்ந்தபின்னர் பூநகரிப் பாதையை திறக்குமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

அதன்மூலம் வடபகுதி மக்களின் பாதைப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணமுடியும் என்று நான் நம்புகிறேன்.

### மீண்டும் போர் வேண்டாம்

தற்சமயம் நடைபெற்று வரும் சமாதானப் பேச்சுக்களில் தடைகள் வரலாம். ஆனால் அவற்றைப் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்றே பெரும்பான்மையான மக்கள் விரும்புகின்றனர்.

மீண்டும் ஒரு போர் ஏற்படக்கூடாது. அதன் மூலம் வீணான உயிர், உடைமைச் சேதங்கள் ஏற்பட இடமளிக்கக்கூடாது என்றே தென்பகுதி மக்கள் விரும்புகின்றனர்.

யுத்தம் ஆரம்பித்து நாடு பின்நோக்கி செல்ல இடமளிக்க கூடாது. இன்றுள்ள நிலையில் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து ஒரு தீர்வு கிடைப்பதற்கு சகல தரப்பினரும் உதவ வேண்டும்— என்று தெரிவித்தார்.

(அ-3)

# கிழக்குப் பல்கலை கழகம் இடம் மாற்றப்படமாட்டாது

## மானியஆணைக்குழு தலைவர்செய்தி

ஏறாவூர், ஏப் 6
மட்டக்களப்பு மாவட்டம் வந்தாறு மூலையில் உள்ள கிழக்கும் பல்கலைக் கழகத்தின் கலை, வர்த்தக பீடங்களைவேறு இடங்களுக்குஇடம் மாற்ற நடவடிக்கை எடுக்கப் பட்டுவருவதாக வெளியான செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை என்று பல்கலைக் கழக மானியஆணைக்குழுவின் பதில் தலைவர் பேராசிரியர் எஸ். பத்மநாதன் கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் மனோ சபாரத்தினத்துக்கு அவசர செய்தி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நடந்த கூட்டம் ஒன்றில் கிழக்குப் பல்கலைக் கழகத்தை இடம் மாற்றுவது குறித்து எந்த தீர்மானமும் எடுக்கப்படவில்லை எனவும் —

இது தொடர்பாக பல்கலைக்கழக ஊழியர்களும் மாணவர்களும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறும் அவர் அந்தச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

[ஐ-7]

## ஜே. வி. பி புரட்சியின் நினைவு நாள்

கொழும்பு, ஏப் 6
ஜே. வி. பி. இயக்கம் 1971 ஆம் ஆண்டு நடத்திய புரட்சியின் 24 ஆம் ஆண்டு நிறைவினை நினைவு கூரும் விழா நேற்று கொழும்பில் கொண்டாடப் பட்டது.

புரட்சியை நினைவு கூரும் நிகழ்ச்சியை ஜே வி பி யினர் பகிரங்கமாக நடத்தியது இதுவே முதல் முறையாகும்.

விகாரமாதேவி பூங்காவில் நடைபெற்ற இவ்விழாவில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

[ஐ-6]

## தாவரவியல் பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப் 6
அமரர் வ. சின்னத்தம்பி ஞாபகார்த்தப் பரிசிற்கான தாவரவியல் போட்டிப் பரீட்சைத் தொடரின் எட்டாவது பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்ட பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

[ஐ-15]

## ஒய்வைப் பயன்படுத்தி. ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுவார்த்தைகளில் சில பின்னடைவுகள் வந்தாலும் அவற்றை நாம் சிறியனவையாகவே கருதுகிறோம். அவை பெரிதாக வளர்வதற்கு நாம் இடம் கொடுக்கப்போவதில்லை.

ஜனாதிபதி சந்திரிகா, திரு. பிரபாகரனுக்குக் கடிதம் ஒன்று எழுதியுள்ளார். நிலைமை சீராகும். பின்னடைவு நீங்கிவிடும். நாம் எமது முயற்சியில் முன்னேறிச் செல்லலாம்.

### இராணுவம் தயார் நிலையில்

கேள்வி: கிழக்கில் அசம்பாவிதம் எதுவும் நிகழ்ந்தால், அதனைச் சமாளிக்கக்கூடிய நிலையில் உங்கள் இராணுவம் தயாராக உள்ளதா?

பதில்: இராணுவம் முழு நிலையில் தயாராக உள்ளது. மாவட்டங்களில் என்னென்ன நடைபெறுகின்றன என்பது இராணுவத்துக்கு நன்றாகத் தெரியும்.

முன்னர் எப்போதும் இல்லாதவாறு அவர்கள் இப்போது கூடுதல் தயார் நிலையில் உள்ளனர். அவர்களுக்கு நல்ல ஓய்வு கிடைத்துள்ளது அதனைப் பயன்படுத்தி அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அழுத்தம், நெருக்கடி இல்லாத நிலையில் அவர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள் அதனால் எந்த வேளையிலும் செயற்படக் கூடிய உஷார் நிலையில் அவர்கள் தயாராக இருக்கிறார்கள். இராணுவ முகாம்களுக்கு சென்று நானே நேரில் பார்த்த பின்னரே இவற்றைக் கூறுகிறேன்.

ஆயினும் இராணுவத்தினருக்கும், புலிகளுக்கும் இடையில் நல்லுறவு நிலவுகிறது. இரு தரப்புகளையும் சேர்ந்த பிராந்தியத் தளபதிகள் அடிக்கடி சந்திக்கிறார்கள்: சேர்ந்து உணவருந்திக்கொண்டே பேசுகிறார்கள் கிழக்கில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் பற்றிய ஒப்பந்தம் பழுதில்லாமல் நடைமுறைப்படுத்தப் படுகிறது.

### பூநகரி விவகாரம்

கேள்வி: யாழ்ப்பாணத்துக்குப் பாதுகாப்பான போக்குவரத்துப் பாதையைத் திறப்பது சம்பந்தமான பிரச்சினையை எவ்வாறு தீர்க்கப் போகிறீர்கள்?

பதில்: எங்கள் தரப்பைப் பொறுத்தமட்டில் நிலைமை மிகவும் தெளிவானது சங்குப்பிட்டிப் பாதையை நாம் திறந்துவிட்டோம்.

பூநகரி இராணுவமுகாம் அகற்றப்படமாட்டாது என்ற எமது முடிவில் நாம் மிகவும் உறுதியாக உள்ளோம்.

எதிர்காலத்தில் யாழ்ப்பாணத்தின் மீது தாக்குதல் நடத்துவதற்குப் பூநகரியை நாம் தொடுதளமாக பயன்படுத்துவோம் என்று விடுதலைப் புலிகள் எண்ணக் கூடும் நாம் ஏன் அவ்வாறு ஆக்கபூர்வமற்ற முறையில் செயற்பட வேண்டும்?

சமாதானத்தைக் காண்பதற்காக, சந்தேகங்கள் இன்றி நேர்மையுடன் உழைக்க வேண்டும்?

எந்த இடத்திலிருந்தும் வெளியேறிப் போகுமாறு நாம் அவர்களுக்கு எந்த நிபந்தனையையும் விதிக்கவில்லை.

சமாதானத்தைக் காணும் போது இவற்றைப் பரிசீலனைக்கு எடுக்கலாம். இராணுவ முகாம்களை மாற்றுவது குறித்தும் படையினரை மாற்றுவது குறித்தும் சமாதானச் சூழ்நிலையில் பேசி ஒரு முடிவுக்கு வரலாம்.

[அ]

## தினேஷ் ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேளை 'சயனைட்' உட்கொண்ட இளைஞர் தினேஷ் குணவர்த்தனாவைக் கொலை செய்வதற்காக அனுப்பப்பட்டவர் எனத் தாம் சந்தேகிப்பதாகவும் மக்கள் ஐக்கிய முன்னணி தெரிவித்துள்ளது.

மக்கள் ஐக்கிய முன்னணியின் இந்தக் குற்றச்சாட்டை பொலீஸ் மா அதிபர் பிராங் டி சில்வா மறுத்துள்ளார்.

[ஐ-6]

## பதமா மகாராஜா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விமான நிலையத்துக்கு அனுப்பப்பட்டிருந்தன.

இந்தப் பொதிகளில் பத்மா மகாராஜாவின் பொதி ஒன்றை பாதுகாப்பு அதிகாரிகள் விமான நிலையத்தில் தடுத்துவைத்திருந்தனர்.

இதனால் பத்மா மகாராஜா விமான நிலையம் வந்ததும் நேரடியாக விசேட பிரமுகர்களுக்கான பகுதிக்குச் சென்று பொதிக்குள் என்ன இருக்கிறது என்பதை தெரிவிக்க வேண்டியிருந்தது.

பத்மா மகாராஜா விமான நிலையத்துக்கு வருவதற்கு முன்னர் விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் பொதிகளை "எக்ஸ்ரே" மெஷின் ஊடாகப் பரிசோதனைக்கு விட்டபோது பத்மா மகாராஜாவின் பொதி ஒன்றுக்குள் சந்தேகத்துக்குரிய பொருள் ஒன்று இருப்பது கண்டறியப் பட்டதாம்.

சந்தேகத்துக்குரிய அந்தப் பொதியை விமான நிலையப் பாதுகாப்பு அதிகாரிகள் உடைக்க முயன்றபோது ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினர் அதனை அனுமதிக்கவில்லை.

இதனால் விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் அந்தப்பொதியை விமான நிலைய பொதிகள் பகுதிக்கு அனுப்பாமல் விசேட பிரமுகர்களுக்கான பகுதிக்கு அனுப்பிவைத்தனர்.

பத்மா மகாராஜா விமான நிலையம் வந்ததும் முதல் வேலையாக விமான நிலையத்தின் விசேட பிரமுகர்களுக்கான பிரிவுக்கு அழைக்கப்பட்டு பொதிக்குள் உள்ள பொருள்களின் விவரம் அவரிடம் கேட்கப்பட்டது.

அதன் பின்னரே அந்த பொதியை விமானத்தில் ஏற்றுவதற்கு விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் சம்மதித்தனர்.

(இ)


வாடிக்கையாளர்களின் நன்மை கருதி.....

சித்திரைப் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு

07 04 95 முதல்

# காவேரியின் மாபெரும் மலிவுவிற்பனை வாரம்

14 04 95 வரை

07-04-1995 ஆம் திகதி முதல் 14-04-1995 வரை

அனைத்து ரக ஆடைவகைகளும் மிகத்தள்ளுபடி விலையில் பெற்றுக்கொள்ள விரையுங்கள்

★ காவேரி பட்டுச் சோலை ★

48, சோதியா தெரு, யாழ்ப்பாணம்.

(36075)


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 858/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 06-04-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org